# 7

# உற்றுநோக்கல்
# (Observation)

## 7.1.1. முன்னுரை

குறிப்பிட்ட ஒரு நோக்கத்தை மனத்தில் வைத்துக்கொண்டு ஒன்றை நுணுக்கமாக நோக்குவது - உற்றுநோக்குவது - உற்று நோக்கல் எனப்படும். சாதாரணமாக நாம் பார்ப்பதிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டதாகும். ஏதேனும் ஒரு குறிக்கோளுடன் உற்றுநோக்குவது என்பது இதன் சிறப்பு. "முழுமையாக ஒன்றை நுணுக்கமாகப் பார்ப்பது; பார்க்கும் போது நோக்கத்துடன் பார்ப்பது; பார்க்கின்றவர் தம்மை முழுவதுமாக அதில் இழந்து விடாமல் பார்ப்பது" என்று உற்றுநோக்கலை எம். ஹெச். கோபால் விளக்குகின்றார்.[1] உற்றுநோக்குவது மிகப்பழமையான முறை. அறிவியல் ஆய்வுகளில் பழங்காலந்தொட்டுப் பயன்படுத்தி வருவது இம்முறையாகும். மனிதன் உலகைப்பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுத்தும் உத்தி இதுவேயாகும். ஆய்விற்கு வருகையில் இதன் செயல்பாடும் அதனால் விளையும், பயன்பாடும் பரந்த அளவில் அமையவல்லன. உற்றுநோக்கலின் போது ஆய்விற்குரிய பொருளின் இயல்பான செயல்பாட்டிற்கே முதலிடம் அளிக்கப்படும். எல்லாவற்றையும் உற்றுநோக்கி அறியமுடியாது. பெரும்பாலானவற்றிற்கு உற்றுநோக்கலைப் பயன்படுத்தலாம்.

7.1.2. தனித்தனியே பகுக்கக்கூடிய மூன்று கூறுகளைக் கொண்டது உற்றுநோக்கல். அவை: புலனுணர்வு, கவனம், பொறியறிவு. புலன்களின் வழியே உணர்வது முதல்படியாகும். எவ்வளவிற்குப் புலன்கள் நுண்மையாகச் செயல்படுமோ அவ்வளவிற்கு ஆய்வாளர்க்குச் சிறந்த செய்திகள் கிட்டுவதை உற்றுநோக்கலில் காணலாம். தொல்காப்பியர் கூறிய, "கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதின் உணரும் உணர்வு"[2] உற்று

நோக்கலின் முதல்படியாக அமைவதை இதனால் உணரலாம். எனவே, உற்றுநோக்கலில் ஈடுபடுகின்ற ஆய்வாளருக்குப் புலன்களின் செயல்பாடு சிறந்ததாக, திண்ணியதாக இருத்தல் வேண்டும் என்பதை அறியலாம்.

நிழல்படக்கருவி, ஒலிப்பதிவுக்கருவி போன்ற பல்வேறு கருவிகள் பயன்பாட்டிற்கு வந்துவிட்டபோதிலும் ஆய்வாளர் நேரடியாகப் பங்கேற்பதும் உற்றுநோக்குவதும் சரியான உற்றுநோக்கலை உருவாக்கும். மேலும் சில சமயங்களில், ஆய்வுப்பொருளாக அமையும் கலைஞர்கள் சிலர், இத்தகு கருவிகளைப் பயன்படுத்துவதை விரும்பமாட்டார்கள். தம் கலைக்குச் செய்யும் இழுக்கு அது என்று கலைஞர் உணர்வு வயப்பட்டு எண்ணக்கூடுமாயின் அங்கு உற்றுநோக்கலுக்குக் கருவிகளைப் பயன்படுத்த ஆய்வாளர் முனையக்கூடாது. இதற்கு ஓர் எடுத்துக்காட்டு தரலாம். வைணவ ஆலயங்களில் இறைவன் திருமுன்பு ஆழ்வார் பாசுரங்களை இசையுடன் பாடி, அபிநயித்து விளக்கும் ஒரு கலை அரையர் சேவை ஆகும்.[3] இக்கலைஞர்கள் அரையர் ஆவர். இன்றும் இக்கலை ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆழ்வார்திருநகரி ஆகிய மூன்று இடங்களில் நடைபெற்று வருகின்றது. இக்கலையைப் பல்காலும் உற்று நோக்கியபின், அவர்களின் இசையை ஒலிப்பதிவு செய்ய ஸ்ரீரங்கத்தில் முற்பட்டபோது, ஆய்வாளரின் அம்முயற்சியை அரையர் தடுத்தார்.[4] ஆய்வாளருக்கு மட்டுமன்றி, வானொலி நிலையத்தார் இதனை ஒலிபரப்ப, கோவில் அறங்காவலர்களிடம் அனுமதி பெற்று வந்தபோதும், ஒலிப்பதிவுக் கருவிகளை நீக்கினால்தான், தாம் அன்றைய நிகழ்ச்சியைத் தொடங்க முடியும் என்று கூறி அரையர் மறுத்துவிட்டார்.[5] இங்கு, இக்கலைஞர் தம் கலையைத் தெய்வீகக்கலையாக எண்ணும் மனஉணர்வு, கருவிகளைப் பயன்படுத்துவதற்குத் தடையாக அமைகின்றது. எனவே, உற்றுநோக்கலின் ஈடுபாடு ஆய்வாளருக்குக் கருவிகளின் துணையைக்காட்டிலும் தம் சொந்தப் புலன்களே மிகுதியும் துணைபுரியும் என்பதை இச்சான்றால் உணரலாம்.

7.1.3. உற்றுநோக்கலின் இரண்டாவது கூறான கவனம் ஆய்வுப்பொருளில் ஆய்வாளர் செலுத்தும் ஆழ்ந்த ஆர்வத்தால் வெளிப்படும் சரியான பயிற்சி, ஆழ்ந்த புலமை, சுறுசுறுப்பு மிக்க செயல்பாடு, செயல்புரியும் ஊக்கத்திறன் ஆகியன உற்று

Scanned by TapScanner

நோக்கலின் தொடக்கநிலையில் ஆய்வாளருக்குத் துணைசெய்யும். மூன்றாவது கூறான பொறியறிவு என்பது புலனுணர்வுடன் தொடர்புடையது. புலன்கள் உணர்வதை மனத்தில் பதிவுசெய்து அறிவால் ஆராய, விளக்க உதவுவது பொறியறிவு. உணர்வது மட்டுமே முதற்கூறு. மூன்றாம் கூறான பொறியறிவு உணர்ந்த மெய்ம்மைகளை வகைப்படுத்தவும், இனங்காணவும், கடந்த கால அனுபவம், கற்பனை, எண்ணம் ஆகியவற்றால் ஒன்றோடொன்று பொருத்திப் பார்த்துச் சரிபார்க்கவும் உதவும். இவ்வாறு உற்றுநோக்கலின் கூறுகள் அமையும்.

7.1.4. 'கண்ணால் பெறும் அறிவு' என்று வழங்கப்பெறும் உற்றுநோக்கல் மூலம் ஆய்வாளர் மிகுந்த பயன்களை எய்துகின்றார். தம்முடைய ஆய்வுப்பொருளில் தோய்ந்த புலமை பெற இது உதவும். மறுதலையாகச் சொன்னால், தம்முடைய ஆய்வுப்பொருளில் ஆழங்காற்பட்டு, அத்துறையில் அண்மைக் கால வளர்ச்சி உள்ளிட்ட பரந்த அறிவுடைய ஆய்வாளரே சிறந்த உற்றுநோக்குபவராக விளங்கமுடியும்.

### 7.2.1. உற்றுநோக்கலின் பயன்கள்

தரவுகளைத் திரட்டுவதற்குப் பிற ஆய்வுமுறைகளை விடவும் உற்றுநோக்கலைப் பயன்படுத்துவதால் மிகுதியான பயன்கிட்டுகிறது என்கின்றனர் ஆய்வாளர். வெளிப்படும் வண்ணமே பண்புகளை அறிவதற்கு உற்றுநோக்கல் துணை செய்கிறது. பேட்டி, வினாநிரல், பட்டியல் போன்ற பிற ஆய்வு முறைகளைப் பயன்படுத்தும்போது, தகவலாளி தன்னைப் பற்றியும் தன் இயல்பைப் பற்றியும் தானே சொல்லுகின்றான். ஆய்வாளரின் வினாக்களுக்குத் தகவலாளி விடை தருகின்றான். ஆனால் உற்றுநோக்கலில் ஆய்வாளர் தாமே தம் புலன்களால் உற்றுநோக்கிப் பதிவுசெய்து கொள்கிறார். தகவலாளியாக இருந்து செயல்படும்போது, ஆய்வாளர் தம்மை மதிக்க வேண்டும் என்பதற்காகத் தன் இயல்பான சில பண்புகளை மறைத்து, உயர்வாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளக் கூடும். உற்றுநோக்கலில் அவ்விடர்ப்பாடு ஏற்படுவதில்லை. ஆய்வாளர் தம் புலன்களால் உற்றுநோக்கி உணர்வதால் உள்ளதை உள்ளவாறே பதிவுசெய்து கொள்கின்றார்.

7.2.2. பெரும்பாலான சமயங்களில் நம் இயல்புகள் பழக்க வழக்கங்களைச் சார்ந்து நின்று விளக்குகின்றன. மனித

Scanned by TapScanner

இயல்புகள் பலவற்றைச் சொற்களில் வடித்துவிட முடியாது. உற்றுநோக்கலின் மூலம் ஆராயும் ஆய்வாளர்களால் இத்தகைய நுண்ணிய கூறுகள் பலவற்றை வெளிக்கொணர முடிந்தது என்று மானுடவியலார் கூறியுள்ளனர். இதற்கு அடிப்படைக் காரணம் ஆய்வாளர் பிறருடைய பண்பாட்டுக் கூறுகளைக் கண்டு உணர்வதே.

7.2.3. தம்முடைய உணர்வு, இயல்பு, பழக்கவழக்கம் போன்றவற்றை மொழியால் நமக்கு உணர்த்த முடியாத சூழலில் ஆய்வாளர் பெரிதும் பயன்படுத்துவது உற்றுநோக்கல் முறையையேயாகும். சிறு குழந்தைகள், விலங்குகள் போன்றவற்றின் இயல்புகளை ஆராயும் ஆய்வுகளை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். பாலர்பள்ளிக் குழந்தைகளுக்குக் கல்வி கற்றுத்தருவதில் ஈடுபடும் ஆசிரியைகளுக்குப் புதிய வழிமுறைகளை எடுத்துக்கூற மேற்கொள்ளும் ஆய்வுகளுக்கு உற்றுநோக்கல் நன்கு துணைசெய்கிறது.

7.2.4. ஆய்வு செய்யப்பெறும் தகவலாளிகளை அவர்களுடைய விருப்பத்தைச் சாராமல் ஆய்வாளர் ஆய்வு மேற்கொள்ள உற்றுநோக்கல் பெரிதும் பயன்படுகின்றது. தகவலாளியிடமிருந்து பேட்டி, வினாநிரல் போன்ற பிற ஆய்வுநெறிமுறைகளால் தகவல் திரட்டவியலாத நிலைகளில் இம்முறையே - உற்றுநோக்கலே - ஒரே வழியாக அமைகின்றது. பிற முறைகளில் உள்ளதைவிடவும் உற்றுநோக்கலில் தகவலாளியின் பங்கு மிகக்குறைவானதே.

## 7.3. கருதுகோளும் உற்றுநோக்கலும்

உற்றுநோக்க இருப்பது எதை என்று முன்னதாகவே ஆய்வாளர் திட்டமிட்டுக்கொள்ள வேண்டும். கருதுகோளை உருவாக்கிக்கொண்டு விட்டால் அதற்கு ஏற்றவாறு, அதனை நிறுவ உறுதுணையாக அமையும் கூறுகளை உற்றுநோக்கலாம். கருதுகோளை உருவாக்கிக்கொண்டு உற்றுநோக்குவதைச் செய்வது மிகுந்த பயனை விளைவிக்கும். ஆய்வை நேரிதாகவும் தேர்ந்தெடுத்ததாகவும் ஆக்க கருதுகோள் உதவும். "கருதுகோளை உருவாக்கிக்கொள்ளாமல் உற்றுநோக்கத் தலைப்படின் அது குறிக்கோளின்றித் திரிவதாக, வெறும் நிகழ்வாக, குவிமையம் அற்ற ஆய்வாக அமையும்" என்கிறார் வாஜ்பாய்.[6] கருதுகோளின்

Scanned by TapScanner

துணையுடன் உற்றுநோக்கவேண்டியதன் இன்றியமையாமை யினை உணரப் பின்வரும் சான்று உதவும். சாலைப் போக்கு வரத்தில் அடிக்கடி விபத்துக்கள் நடைபெறக் காரணம் வண்டிகளின் வேகம் என்பது கருதுகோள் என்று கொள்வோம். அந்த ஆய்வில் பெருவழிச் சாலையா குறுகலான சாலையா என்று சாலைகளின் தன்மையை உற்றுநோக்குதல் வேண்டாம். வண்டிகள் செல்லும் வேகத்தை மட்டுமே உற்றுநோக்குதல் வேண்டும்.[7] ஆய்வின் தலைப்பு, கருதுகோள் ஆகியவற்றை மையமிட்டதாகக் குறிக்கோளுடையதாக உற்றுநோக்கல் அமையவேண்டும்.

தெருக்கூத்தில் இடம்பெறும் இசைபற்றி ஆராயும் ஆய்வாளர், இசைக்கூறுகளை மட்டும் உற்றுநோக்க வேண்டும். அதைவிடுத்துக் கூத்தர்களின் ஆடை, ஒப்பனை, நடிப்பு போன்றவற்றை உற்றுநோக்க வேண்டாம். உற்று நோக்குகையில் பின்னணி பரந்ததாக உள்ளதா என்பதையும் ஆய்வின் பொதுச்சூழல் என்ன என்பதையும் அறிந்து நோக்கல் வேண்டும்.

### 7.4.0. உற்றுநோக்கலின் வகைகள்

உற்றுநோக்குக்கலையைக் கட்டுப்பாடு உடையது (Controlled), கட்டுப்பாடு அற்றது (Non-Controlled) என்று இருவகையாகப் பகுப்பர்.

7.4.1.1. கட்டுப்பாடற்ற உற்றுநோக்கலில் ஆய்வாளர் கருவிகளைப் பயன்படுத்துவதில்லை. மெய்ம்மைகளைப் பதிவு செய்யவும், அளக்கவும், அவற்றைச் சரிபார்க்கவும் கருவிகளை இவ்வகை உற்றுநோக்கலில் பயன்படுத்துவதில்லை. கருவிகளை நம்பாமலும் மாதிரிகளை (samples) வைத்து ஆராய முற்படாமலும் ஆய்விற்குரிய சிக்கலிற்கும் ஆய்வுக் குழுக்களுக்கு மிடையில் வேறுபாடு இல்லாமல் அமைவது கட்டுப்பாடற்ற உற்றுநோக்கல். சுருங்கக்கூறின், ஆய்வாளர் தாம் கண்முன்னே காண்பதை விடவும் தமக்கு மிகுதியாகத் தெரியும் என்று எண்ணுபவராக இவ்வகை உற்றுநோக்கலில் காணப்படுவார். இயற்கையாக உள்ளபடியே பிறகருவிகளின் துணையின்றி உற்றுநோக்குவது கட்டுப்பாடற்ற உற்று நோக்கலின் இயல்பாகும். சேரியில் சென்று மக்களின் பழக்க வழக்கங்கள், சடங்குகள் இவற்றை ஆராய்வது இவ்வகைக்கு எடுத்துக்காட்டு ஆகும். இவ்வகை உற்றுநோக்கலில் ஆய்வாளர் தற்சார்புடன்

Scanned by TapScanner

விளக்கம் தர இடம் ஏற்படும். குறிக்கோள் ஏதுமில்லாது மேலோட்டமாக உற்றுநோக்குவதாக அமையும். நோக்கப்படும் தகவலாளியின் அல்லது அக்குழுவின் சமூக நிலை, மனநிலை ஆகியவற்றை நோக்காமல் ஆய்வாளர் தம் மதிப்பிற்கேற்ப நோக்கக்கூடிய வாய்ப்பு இவ்வகையில் உண்டு.

7.412 கட்டுப்பாடற்ற உற்றுநோக்கலை முழுவதுமாக நம்ப இயலாது. பார்த்தவற்றைச் சரியாக ஒத்திட்டுப் பார்க்கவோ, சில முடிவுகளுக்கு வரவோ வாய்ப்பின்றிக் குறிக்கோளற்றதாக அவ்வகை உற்றுநோக்கல் வழிசெய்யும். பார்வையாளரின் நோக்கலின் காரணமாக உற்றுநோக்கலே வண்ணம் பெற்றதாக, விருப்பு - வெறுப்புகளுக்கு ஆட்பட்டதாக ஆகிவிடும். சரிதானா என்று ஒத்திட்டுக் காண இவ்வகை உற்றுநோக்கலில் வழி யில்லாததே இதற்குக் காரணமாகும். உற்றுநோக்கி அறியப்பட்ட மெய்ம்மைகள் உண்மையாக இல்லாதபோதிலும் அவை உண்மையென்று ஆய்வாளர் முடிவிற்கு வர இக்கட்டுப்பாடற்ற உற்றுநோக்கலில் வாய்ப்புண்டு.

7.4.1.3. இத்தனை தடைகள் இருந்தபோதிலும் சமூக உண்மைகள் பலவற்றை அறிய இவ்வகை உற்றுநோக்கலே துணை செய்கிறது. பல்வேறான சமூகக்கொள்கைகளையும் தனி மனிதர்களையும் வைத்து ஆராய உதவும் ஆய்வுக் கருவிகள் நம்மிடம் இல்லாததால் அவற்றை இயற்கைச் சூழலிலே ஆராய வேண்டியுள்ளது. எனவே, ஆய்வில் கட்டுப்பாடற்ற உற்று நோக்கல் பெரிதும் தேவைப்படுகிறது.

### 7.4.2.1. கட்டுப்பாடுடைய உற்றுநோக்கல்

கட்டுப்பாடற்ற உற்றுநோக்கலில் காணப்படும் இடையூறு களைக் களைவதற்காகக் கட்டுப்பாடுடைய உற்றுநோக்கலைப் பின்பற்றத் தலைப்பட்டனர், சமூகவியலார். கட்டுப்பாடுடைய உற்றுநோக்கலுக்குப் புறநோக்கும் நுணுக்கமான பார்வையும் தேவைப்படும். இவ்வகை உற்றுநோக்கலைப் பன்முறை நிகழ்த்தலாம். உற்றுநோக்கும் ஆய்வாளரின் சொந்த விருப்பு வெறுப்பு, ஆய்வைப் பாதித்ததா என்று கண்டறியவும், தவறான தரவுகள் திரட்டப்பட்டதா என்று சரிபார்த்துக் கொள்ளவும் புறக்கூறுகளால் பாதிப்பு ஏதும் ஆய்வில் ஏற்பட்டதா என்று கண்டறியவும் இவ்வகை உற்றுநோக்கல் துணைசெய்கின்றது. தரவுகளைத் துல்லியமாகத் திரட்டக் கருவிகளைப்

பயன்படுத்துவது கட்டுப்பாடுடைய உற்றுநோக்கலின் சிறப்பாகும். உற்றுநோக்கும் சூழல் முறைப்படுத்தப்படும். பிரதிநிதிப் படுத்துவதாக அமையும். மாதிரி கிடைக்கும்வரை பலவாறான முயற்சிகள் செய்யப்படுவதையும் மாதிரிகளில் ஏற்படக்கூடிய தவறுகளைத் திருத்துவதில் கவனம் செலுத்துவதையும் உற்று நோக்குவது இவ்வகையின் தனித்தன்மையாகும். வினாநிரல், பட்டியல், குறிப்புக்கள், புகைப்படங்கள், நிலப்படங்கள் போன்ற பல்வகைக் கருவிகளைப் பயன்படுத்திக் கட்டுப்பாடுடைய உற்றுநோக்கலை ஆய்வாளர் மேற்கொள்ளுவர். வசதியும் வாய்ப்பும் இருப்பின் பரந்த ஆய்வுக்கூடங்களையும் இதற்குப் பயன்படுத்துவர்.

*7.4.2.2.* கடந்த முப்பது, நாற்பது வருடங்களில் கட்டுப்பாடுடைய உற்றுநோக்கலின் இன்றியமையாமையை வலியுறுத்திப் பலரும் இதனை மேற்கொண்டுள்ளனர். சமுதாயக் கொள்கைகளின் தரவுகளை இவ்வகை உற்றுநோக்கலின்வழி திரட்டுவதால் அவை யாராலும் அளந்தறியக்கூடியதாகக் காட்சிக்கு எளியதாக அமையும். ஒருவழித்திரைகள், கண்ணாடிகள், அசைவுத்தட்டுகள் (movement recorders), ஒலிப்பதிவுத்தட்டுகள், இயங்கு படங்கள் (motion pictures), அளந்தறியும் அளவுகோல்கள், உற்றுநோக்கல் பட்டியல்கள் போன்ற பல்வேறு கருவிகள் பழக்கத்திற்கு வந்துவிட்டன. இவற்றின் உதவியால் கட்டுப்பாடுடைய உற்றுநோக்கல் நன்கு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. "மருத்துவருக்கு வெப்பமானியும் (thermometer), இதயத்துடிப்பு மானியும் (stethoscope) எவ்வாறு இன்றியமையாதனவோ அவ்வாறே சமூக ஆய்வாளனுக்கு உற்றுநோக்குக் கருவிகளும் தேவை" என்று கூறும் கருத்து இங்கு அறியத்தக்கது. சோதனை முறைகளையும் உள்ளடக்கிய முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒன்றாக அமைவது கட்டுப்பாடுடைய உற்றுநோக்கல் என்று இவற்றால் அறியலாம். சிறுகுழந்தைகளின் பண்புகள், இயல்புகள் முதலியவற்றை அறிய மேற்கொள்ளப்படும் ஆய்வுகளில் இவ்வகை உற்றுநோக்கல் மிகுதியும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மழலையர்பள்ளிச் சிறு குழந்தைகளுக்குப் பாடத்திட்டம் வகுக்க, இவ்வகை உற்றுநோக்கலே உதவும். இதனை மேற்கொண்டு அவர்களின் இயல்பு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை உற்று நோக்கி அவற்றிற்கு ஏற்ப அமைத்தால் பாடத்திட்டமும் கல்வி கற்பதும் மழலையர் பள்ளியில் சிறப்பானதாக அமையும்.

Scanned by TapScanner

7.4.3.1. இனி, ஆய்வாளர் நிலையில் உற்றுநோக்கலை இரு வகையாகப் பிரிக்கலாம். ஆய்வாளர் பங்குபெறும் உற்று நோக்கல் (participant observation), பங்குபெறா உற்றுநோக்கல் (non-participant observation). முற்கூறிய இரண்டும் உற்றுநோக்கலை வைத்துச் செய்யப்பட்ட பகுப்பு. இவை, ஆய்வாளரை வைத்துச் செய்யப்பட்ட பகுப்பு ஆகும். முற்கூறிய கட்டுப்பாடற்ற உற்று நோக்கல், கட்டுப்பாடுடைய உற்றுநோக்கல், ஆகிய இரண்டிலுமே பங்குபெறும் உற்றுநோக்கல், பங்குபெறா உற்றுநோக்கல் ஆகிய இரண்டும் அமைய முடியும். ஆய்வின் தன்மை, கருதுகோளின் இயல்பு, திரட்டப்பட வேண்டிய தரவுகள், ஆய்வுச்சூழல் ஆகிய பல்வேறு கூறுகளுக்கு ஏற்பப் பொருத்தமான உற்றுநோக்கலைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

### 7.4.3.2. பங்குபெறும் உற்றுநோக்கல்

மேற்கொள்ளும் ஆய்வுக்களத்தில் ஆய்வாளர் தாமும் ஒருவராக இருந்து அப்பொருளில் தம்மையும் கலந்து, வாழ்ந்து, பெறும் அனுபவம் இவ்வகையில் சிறப்பான ஒன்று. 'கரக ஆட்டம்' என்று ஆராயும் ஒருவர் தாமும் அக்கலையைக் கற்று அக்குழுவில் ஒருவராக இருந்து ஆடிப் பற்பல அனுபவங்களைப் பெற்று, அக்கலையையும் கலைஞர்களையும் உற்றுநோக்கித் தம் ஆய்விற்குரிய தரவுகளைத் திரட்டிக் கொள்கின்றார். தாம் கலைஞராக இருந்துகொண்டே தம் கூரிய நோக்கால் உற்றுநோக்கித் தரவுகளைத் திரட்டுகையில் அவர் ஆய்வு மிக்க பயன் விளைவிக்கிறது. வரலாற்றாளர் ஆகவோ அல்லது பத்திரிகை நிருபராகவோ அல்லது ஆய்வாளர் தனித்திறமை யுடன் ஆய்வில் தாம் கலந்து பங்குபெறுவது இவ்வகை உற்று நோக்கலில் இடம்பெறுகிறது. ஆய்விற்கு ஒரு குழுவை (மக்கள் சமூகத்தை) எடுத்துக்கொண்டால், அவர்களின் இயல்பான பணிகள், சமூகச் செயல்பாடுகள், நிகழ்ச்சிகள், விழாக்கள் ஆகியவற்றிலெல்லாம் பார்வையாளராக அல்லாமல் தாமும் அவர்களுள் ஒருவராக ஆய்வாளர் பங்கேற்று வாழ்கிறார். புறத்தே நின்று செயல்படும் வெறும் ஆய்வாளராக அல்லாமல் அவர்களின் பணிகளில் விருப்புடன் பங்கேற்றவராகிறார்.

7.4.3.3. ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும் குழு இவ்வகை உற்றுநோக்கலில் அதன் இயல்பான சூழலில் ஆராயப்படுகிறது. ஆய்வாளர் பங்குபெறா உற்றுநோக்கலில் இருப்பதைவிடவும் ஆய்வாளர்

Scanned by TapScanner

மக்களுடன் மிக அணுக்க உறவுபூண்டு ஆய்வை அவர்களுடன் கலந்து மேற்கொள்கின்றார். ஆய்விற்குரிய குழுவின் செயல்களுடன் தாமும் கலந்து மிக அருகில் நின்று உற்றுநோக்கி அறிவதால் பார்வை மிக்கஆழமும் நுணுக்கமும் பெற்று வலிமை பெறுகின்றது. ஆய்விற்குரிய மக்களின் உணர்வுகளை எட்டி நின்று உணர்கையில் புறச்சூழலால் தாக்குண்டு விடக்கூடிய நிலை ஆய்வாளர்க்கு ஏற்படக்கூடும். இதனைத் தவிர்க்கப் பங்குபெறும் உற்றுநோக்கலே சிறந்ததாகும். அம்மக்களுடன் கலந்து வாழுகையில்தான் அவர்களுடன் உரையாடி அவர்தம் வாழ்க்கைமுறையின் சிறப்பியல்புகளை உணர்ந்துகொள்ள இயலும். இதன் விளைவாக வெறும் உற்றுநோக்கலால் மட்டும் அறிந்துகொள்ள இயலாதவற்றையும் அறியலாம். மலைவாழ் மக்களின் திருமணச் சடங்குகளைப் பார்வையாளர் நிலையில் உற்றுநோக்குவதைவிட, அவர்களுடன் கூடி உறைந்திருந்து உணர்வதாலும், அவர்களோடு பேசியும் பழகியும் அறிவதாலும் மிகுதியான செய்திகளை, அவர்தம் மணச்சடங்குகளை, அவற்றின் ஈரம்புலரா இயல்பான தன்மையில் ஆய்வாளர் அறியலாம். இப்பயன், பங்குபெறும் உற்றுநோக்கலில் மட்டுமே விளையும். இயல்பான சூழலுடன் இசைந்தும் கலந்தும் இருக்கையில் செய்திகளை மிகுதியாக அறியமுடியும். ஒப்பாரிப் பாடல்களை ஆய்வு செய்பவர், ஓர் இறப்பு நிகழ்ந்தபோது மட்டுமே அவர்கள் பாடும் முறை, இசை, ஒலிப்புமுறை ஆகியவற்றை அறியமுடிகிறது. பங்குபெறுபவராக வரும் ஆய்வாளரையே மக்கள் வரவேற்கின்றனர். வெறுமனே செய்திகளை அறிந்து செல்ல வரும் கல்வியாளர்களைவிடவும் தம்முடன் கலந்து பங்குபெறுபவராக வரும் ஆய்வாளர்களுக்கே மக்கள் தம்முடைய பல்வேறு சமுதாயச் செயல்பாடுகளை விளக்குகின்றனர்.

7.4.3.4. ஆய்வாளர் பங்கேற்று உற்றுநோக்குகையில் உணர்ச்சி வயப்பட்டுவிடக்கூடாது. நடுநிலையுடன் விளங்குபவராகவோ விருப்பு வெறுப்பற்றவராகவோ இருத்தலைவிடவும், ஆய்வாளர், பங்கேற்கும் குழுவில் ஒருவராகத் தம்மை எண்ணிக்கொள்ள வேண்டும். பங்கேற்கும் நோக்கற்குரிய தன்மைக்கு மாறுபட்ட செய்திகளைப் பதிவுசெய்யாது விட்டுவிடுதல் நல்லது. நாள் செல்லச்செல்ல ஆய்வாளர் தம்மை உற்றுநோக்கலுக்குரிய குழுவுடன் ஒன்றுபடுத்திக் கொள்கிறார். இதனால் அத்தகைய சந்தர்ப்பங்களில் அக்குழுவினரின் செயல்களைத் தம்முடைய

சொந்த எண்ணங்களினூடே பார்த்திடலாமே அன்றி எப்போதும் ஆய்வாளராகவே பார்த்தல்கூடாது. உற்றுநோக்கலுக்குரிய குழுவுடன் இணைத்துக்கொண்டுவிடுவதால் பல சந்தர்ப்பங்களில் இன்றியமையாச் செய்திகளை விட்டு விடக்கூடும். வெறும் பார்வையாளராக வரும் புதியவன் ஒருவனைவிடவும் பங்கு பெறும் உற்றுநோக்கலை மேற்கொள்ளும் ஆய்வாளர் தவறி விடுவதை இதனால் அறியலாம். குழுவில் ஒரு சிலரைப் பழகி வைத்துக்கொண்டு பங்குபெறும் உற்று நோக்கலை மேற்கொள்வதால் ஆய்வாளரின் அனுபவம் வரையறைக்குட் பட்டதாகிவிடும். இடர்ப்பாடு இவ்வகையில் உள்ளது. குழுவின் உட்பூசல்களை உருவாக்குபவராக ஆய்வாளர் அமைந்துவிடின் ஆய்வின் நோக்கமே பிறழ்ந்துவிடும். இவ்வகையில் உற்று நோக்கலில் அதற்கு வாய்ப்புண்டு.

7.4.3.5. விருப்புக்களைக் குறைத்துக்கொண்டு, உணர்வுகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு நடுநிலையில் நின்று செயல்படுபவராக ஆய்வாளர் இருப்பின் மேற்கூறிய இடர்ப்பாடுகளைக் கடந்து வெற்றிகரமானதாக இவ்வகை உற்றுநோக்கலைப் - பங்குபெறும் உற்றுநோக்கலை - மேற்கொள்ளலாம். மனிதாபிமான உணர்வு களையும் பழக்கவழக்கங்களையும் முற்றிலுமாகக் கண்டறிவதற்கு இவ்வகை உற்றுநோக்கல் முறையை உளவியலார் வற்புறுத்து கின்றனர். மலைவாழ் மக்கள் பற்றிய ஆய்விற்கு இம்முறையை மிகுதியும் பயன்படுத்திக் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றதை இந்தியச் சமூகவியலார் தத்தம் ஆய்வுகளில் மிகுதியும் கூறியுள்ளனர்.

### 7.4.4.1. ஆய்வாளர் பங்குபெறா உற்றுநோக்கல்

ஆய்விற்குரிய குழுவில் தாமும் ஒருவராகப் பங்கேற்காமல் விலகியே இருந்து அவர்களை (அக்குழுவினரை) ஆய்வாளர் உற்றுநோக்குவது பங்குபெறா உற்றுநோக்கல் ஆகும். முழுவதும் பங்குபெறாது உற்றுநோக்குவது கடினமானதாகும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அங்கிருந்துகொண்டு, ஆனால் அதில் பங்குபெறாமல், ஒருவர் இருக்க முடியுமா என்பது ஐயத்திற் கிடமானது. இதனால் ஆய்வாளர்க்கும் ஆய்விற்குரிய குழுவிற்கும் இடையூறுகள் நிகழும். எனவே பங்குபெறா உற்றுநோக்கலை ஆய்வாளர் மேற்கொள்ளினும் ஒருசில பொழுதுகளிலாவது அவர் பங்குபெறவேண்டிய தேவை ஏற்படும். பங்குபெறா

Scanned by TapScanner

உற்றுநோக்கல் என்பது ஓரளவிற்குத்தான் இயலும் என்று இதனால் அறியலாம்.

7.4.4.2. புறநோக்கும் அறிவியல்நோக்கும் இவ்வகை உற்றுநோக்கலில் ஆய்வாளர்க்கு இன்றியமையாதன; நடுநிலையும் உணர்வுவயப்படாத போக்கும் வேண்டற்பாலன. அப்போதுதான் அனைத்து உறுப்பினர்களிடமும் ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியும். ஆய்விற்குரிய குழுவிற்குப் புதியவராக ஆய்வாளர் தம்மை வைத்துக்கொள்வதால் அக்குழுவினரின் நுணுக்கமான விவரங்களையும் அறியலாம். குழுவில் இருந்து தம்மை விலக்கிக்கொண்டவராக - பற்றறுத்தவராக ஆய்வாளர் இருத்தல் வேண்டும். எளிதாக உற்றுநோக்க இத்தன்மை உதவும்.

7.4.4.3. பங்குபெறாமல் ஒதுங்கிநின்று தொலைவிலிருந்தே நோக்குவதால் குழுவினரின் செயல்களையும் இயல்புகளையும் பாராட்டுவதற்கு ஆய்வாளர் தவறிவிடுகிறார். இதனால் சில சமயங்களில் ஆய்விற்குரிய பல தகவல்களைத் திரட்டாது ஆய்வாளர் விட்டுவிடக்கூடிய வாய்ப்பு இவ்வகை உற்று நோக்கலில் உள்ளது. தொலைவிலிருந்து பங்குபெறாமல் இருப்பதால் வரையறுத்த சிலவற்றையே ஆய்வாளர் நோக்குகிறார். எனவே, பங்குபெறும் உற்றுநோக்கலை மேற்கொள்ளும் ஆய்வாளர்க்குக் கிட்டும் அனுபவப் பரப்பும் தகவல் அளவும் பங்குபெறா உற்றுநோக்கலை மேற்கொள்பவர்களுக்குக் கிட்டுவது இல்லை. ஆய்வாளர் தம்முள் ஒருவராகக் கலக்காமல், பட்டும்படாமல் புதியவராக இருப்பதைப் பல பொழுதுகளில் ஆய்விற்குரிய குழுவினர் விரும்பமாட்டார்கள். இவ்வாறு சில இடர்ப்பாடுகள் இவ்வகை உற்றுநோக்கலில் உள்ளன.

**7.5.1. கள உற்றுநோக்கல் ஆய்வுகளை அமைப்பது:**

ஆய்வின் தலைப்பு, கருதுகோள் ஆகியவற்றிற்கு ஏற்பக் களத்தில் சென்று உற்றுநோக்குவது தேவையா என்று ஆய்வாளர் முதலில் திட்டமிட்டுக்கொள்ள வேண்டும். பின்னர் எவ்வகை உற்றுநோக்கல் என்றும் வரையறுப்பது நல்லது. இவ்வாறு செய்தபின் உற்றுநோக்கலுக்குரிய திட்டம் ஒன்றை உருவாக்கிக்கொள்ளல் வேண்டும். தலைப்பிற்கு ஏற்றவாறோ, கருதுகோளை நிறுவுவதற்கு இசைந்தவாறோ எவ்வாறு தரவுகளைத் திரட்ட இவ்வுற்றுநோக்கல் பயன்படும் என்றும் வரையறுத்துக்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, கரக

Scanned by TapScanner

ஆட்டக்கலை என்றோ, வில்லுப்பாட்டு என்றோ ஆராயும் ஆய்வாளர் ஆய்விற்குரிய குழுவினரை அல்லது (குழுக்களை) எவ்வளவு காலம் உற்றுநோக்குவது என்று வரையறுக்க வேண்டும். ஆய்வாளர் தாமும் அக்கலையைக் கற்று அக்குழுவினருடன் நிகழ்ச்சிகளில் பங்கேற்று ஆடி, கலையின் நுட்பங்களையும் கலைஞர்கள் பற்றிய நுணுக்கமான செய்தி களையும் திரட்டலாம்.

7.5.2. ஆய்வாளர் தாமே இவ்வாறு கள ஆய்வில் உற்று நோக்கிக் கண்டறிய வேண்டும். ஆய்வுக்குழு ஒன்றை உற்று நோக்கலுக்கு ஆய்வாளர் பயன்படுத்தினால், முன்கூட்டியே ஆய்வுக்குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி நல்கவேண்டும். எவ்வாறு உற்றுநோக்குவது, எவ்வளவு தகவல்களைத் திரட்டுவது, செய்திகளைக் குறிப்பது எவ்வாறு, எந்த நோக்கத்திற்காக உற்றுநோக்குவது என்ற அனைத்துச் செய்திகளையும் ஆய்வுக் குழுவிற்கு முதலிலே எடுத்துக்கூறி அவர்களுக்கு முதன்மை ஆய்வாளர் (chief investigator) பயிற்சி தர வேண்டும். சான்றாக, பட்டிமன்றம் குறித்து ஆராயும் ஆய்வாளர், வினாநிரலை அல்லது பட்டியலைத் தந்து பல்வேறு வினாக்களுக்குரிய விடைகளைக் குறித்துத் தருவதற்காக ஆய்வுக்குழு ஒன்றை முன்கூட்டியே பயிற்சி அளித்துக் கள ஆய்விற்கு (பல்வேறு ஊர்களில் நடக்கும் பல்வேறு அணிகளின் வெவ்வேறு பட்டிமன்ற நிகழ்ச்சிகளுக்கு) அழைத்துச் சென்று உற்றுநோக்கச் செய்து தகவல்களைத் திரட்டுவதைக் கூறலாம். இவ்வாறு ஆய்வுக்குழுவின் உதவியைப் பயன்படுத்தும் ஆய்வாளர் அக்குழுவினருக்கு நல்கும் கருவிகளை (மேலே கூறிய பட்டிமன்ற ஆய்வு எடுத்துக்காட்டில் வினாநிரல் அல்லது பட்டியல்) இயக்கும் முறைபற்றி நன்கு விளக்க வேண்டும். அவ்வாறே வினாநிரல், பட்டியல் போன்றவற்றை உருவாக்குவதிலும் முதன்மை ஆய்வாளர் ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும்.

7.5.3. முதன்மை ஆய்வாளர் தாம் மட்டும் உற்று நோக்குகையில் அனைத்துச் செய்திகளையும் ஒன்றுவிடாமல் திரட்டிக் குறித்துக்கொண்டு பின்னர் அவற்றை வகைப்படுத்த வேண்டும். சுருக்கெழுத்துப் பயிற்சி பெற்றவராக ஆய்வாளர் இருப்பது பல சமயங்களில் பயன் நல்கும். ஆய்வாளரின் சொந்த விருப்பு வெறுப்புக்கள் இடம்பெற்றுவிடாமல் இருக்கும்படி

அவர் பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு ஆய்வாளர் தம்மை உற்றுநோக்கித் தம் குறைநிறைகளைக் கண்டறிந்து ஆய்விற்குத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வது நல்லது. முன்னரே திட்டமிட்டபடி ஆய்வாளர் உற்றுநோக்கித் தரவுகளைத் திரட்ட வேண்டும். ஆய்வாளரின் திட்டத்தில் இடம்பெறாமல் கள ஆய்வில் கண்டறியும் சிறப்பான தகவல்களையும் அவ்வப்போது அவர் குறித்துக்கொள்ள வேண்டும். அதற்காக முற்றிலும் திட்டத்தை விடுத்து வேறானவற்றை நோக்குதல் கூடாது.

7.5.4. கள ஆய்வில் உற்றுநோக்கி முழுவதுமாகத் தரவுகளைத் திரட்டியபின் அவற்றை வகைப்படுத்திப் பலவாறு பட்டியல் இடும் பணியைச் செய்யவேண்டும். கள ஆய்வு நடைபெற்று வருகையிலே வகுப்பதும் தொகுப்பதும் நடைபெறினும் அவை இறுதியிலே முழுவடிவம் பெறும். இடையில் தவறு அல்லது விடுகை இருப்பின் மீண்டும் சரி செய்துகொள்ள இது உதவும்.

### 7.6.1. தன்னை உற்றுநோக்கல் (Self observation)

பிறரை உற்றுநோக்குவதற்குமுன் ஆய்வாளர் தம்மையே உற்றுநோக்கி உணரவேண்டும். ஆய்வாளர் தம் சொந்த விருப்பு, வெறுப்பு, உணர்வுவயப்படும் பாங்கு, சார்புத்தன்மை ஆகியவற்றைக் கண்டறிந்து அவை தலைகாட்டாவண்ணம் இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, பட்டிமன்றம் என்னும் பொருள்பற்றி ஆராயும் ஆய்வாளர் தாமே பட்டிமன்றப் பேச்சாளராக இருக்கிறார் என்று கொள்வோம். அவருக்கென்று விருப்பமான தலைப்புக்கள், தம் கட்சிப் பேச்சாளர்கள், எதிர்க்கட்சிப் பேச்சாளர்கள், நடுவர், தீர்ப்பு வழங்கப்பட வேண்டியமுறை, எதிர்பார்ப்பு, தம் செல்வாக்கை விரிவாக்கித் தம் ஆளுமையை வெளிப்படுத்தத் துடிக்கும் முனைப்பு ஆகியனவற்றை ஆய்ந்து அவை உற்றுநோக்கலில் குறுக்கிடாமல் அவர் கவனமாகப் பார்த்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறே அவருக்குப் பிடிக்காத பொருள், பேச்சாளர், நடுவர் என்பன எவ்வாறு உற்று நோக்கலில் தாக்கம் செய்கின்றன எனவும் கண்டறிய வேண்டும். இவை எல்லாவற்றையும் நன்கு அறிந்து இடர்களைக் களைந்து தம்மையே சுயவிமர்சனம் செய்துகொள்ளும் ஆற்றல்மிக்க ஆய்வாளர்கள்கூடச் சில சமயங்களில் உணர்ச்சிவயப்பட்ட தையும், அந்நிலை, தம் ஆய்வைப் பாதித்ததையும் கூறியுள்ளனர்.

உறுதியான தன்னை அறியும் திறனும், பிறரது திறனாய்வும் சேர்ந்து ஆய்வாளரின் சொந்த விருப்பு வெறுப்புக்கள் உற்று நோக்கலைப் பாதிப்பதைத் தடுத்து, ஆய்வை வளமிக்கதாக்கும். சமூக ஆய்வின் இயக்குநர்களில் சிலர் தத்தம் துறை ஆய்வாளர்களிடம் அவர்தம் சொந்த வாழ்க்கை வரலாறுகளை சுயசரிதைகளை எழுதச் சொல்லி, அவற்றை நன்கு திறனாய்ந்து அவர்களிடமுள்ள விருப்புவெறுப்புக்கள், உணர்வுவயப்பட்ட இடங்கள், எதிர்ச்செயல்கள் ஆகியவற்றைக் கண்டறிந்தனர். இவை பின்வரும் ஆய்வாளர்களுக்கும் பயன் விளைவித்தன. தம்மைத் திருத்திக்கொள்ள உதவின. "உற்று நோக்கலில் ஏற்படக்கூடிய தவறுகளைக் குறைத்துக்கொள்ள உதவுமாறு தங்களுடைய வலிமையையும் வலிமையின்மையையும் குறித்துக் கொண்டு அவற்றிற்கு ஏற்பச் செயல்படுமாறு மானுடவியல் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும்" என்று மார்கரெட் மீட் வலியுறுத்துகிறார்.[10]

7.6.2. ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வு அனுபவங்களையும், குறிப்பாகக் களஆய்வு மேற்கொள்ளும் அனுபவங்களையும், ஆய்வில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளையும் அவற்றை எதிர்த்து வெற்றிகொண்ட பாங்கையும் குறித்து வைத்துக்கொள்ளுதல் நலம். பின்வரும் ஆய்வாளர்களுக்கு அவை வழிகாட்டியாக அமையும். ஒரே மாதிரியான சூழலில் எப்படிச் செயல்படுவது என்று அறிந்து அதற்கு ஏற்பச் செயல்பட உதவும். மக்களின் பழக்கவழக்கங்களை ஒரே மாதிரியான சூழல்களிலும் பண்பாட்டுப் பின்னணிகளிலும் அறிந்துகொள்ள உதவும். இதனால் உற்றுநோக்கலில் முன்னோருக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகள் பின்வருபவருக்கு ஏற்படாமல் உற்றுநோக்கல் சிறப்புமிக்கதாக அமைந்து ஆய்வு சிறக்கும்.

7.7.1. சமூக ஆய்வில் உற்றுநோக்கலின் இன்றியமையாமை. உற்றுநோக்கல் எளியமுறையாக உள்ளது. இயற்கையில் அப்படியே பின்பற்ற ஏற்ற முறை இது. நோக்குவது என்பது மனிதனுக்கு இயற்கையாகவே அமைந்த ஒன்றானதால் எளிய பயிற்சி மூலம் உற்றுநோக்கலை ஆய்விற்குப் பயன்படுத்தலாம். கருதுகோளை உருவாக்குவதற்கு உற்றுநோக்கல் துணை செய்கிறது. சமூக ஆய்வாளர் தம்மைச் சுற்றியுள்ள மனிதர்களை இடைவிடாமல் உற்றுநோக்கி அவர்களின் இயல்புகளையும்

சமூகப் போக்குகளையும் அறிந்துகொள்கின்றனர். திட்டமிட்டுச் செயல்படாமல் இயல்பாக நோக்குவதே இப்பட்டறிவை நல்குவதால், கருதுகோளை இதனால் அவர்கள் உருவாக்கிக் கொள்கின்றனர். எனவே, சமூக ஆய்வாளர் நன்கு உற்றுநோக்கு பவராகவும் விளங்க வேண்டும்.

7.7.2. பிறமுறைகளை விடவும் **மிகவும் சரியானதாக அமைவது உற்றுநோக்கல் முறையாகும்.** பேட்டி, நிகழ்வு, வரலாறு போன்ற பிறமுறைகளில் ஆய்வாளர் குழுவைச் சார்ந்தவரை - தகவலாளியை - நம்பவேண்டி உள்ளது. எனவே ஆய்வாளர் அத்தகவல்களை ஒப்பிட்டு அவை சரியானவையா என்று பார்க்க வழியின்றிப் போகிறது. உற்றுநோக்கலில் அவ்விடர்ப்பாடு இல்லை. ஆய்வாளர் தாமே நேரில் கண்டு அறியவும் ஐயம் ஏற்பட்டவிடத்து அவற்றைச் சரிபார்க்கவும் வழி இம்முறையில் உள்ளது. பிறமுறைகளில் திரட்டப்படும் தரவுகளைவிடவும் உற்றுநோக்கலின்வழி ஆய்வாளர் திரட்டுபவை மதிப்பு மிக்கதாயும் நம்பகத்தன்மை மிகுந்ததாயும் உள்ளவை. இதனால் கிடைக்கும் **ஆய்வு முடிவுகள் பிறரால் ஏற்றுக் கொள்ளத் தக்கவையாக இம்முறையில் அமைகின்றன. கருதுகோளைச் சோதித்துப் பார்த்து உதவுவதிலும் உற்று நோக்கல் பெரிதும் துணைபுரிகிறது.** ஆய்வாளர் தாம் கண்ணால் பலமுறை கண்டு கருதுகோளை நிறுவியபின், பிறர் அதனை ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில், விரும்பினால் பிறர் தாமே உற்றுநோக்கி அறியத்தக்க முறையில் அமைவதால் அத்தரவுகளின் சோதனைப்பான்மையும், யாவரும் அறியத்தக்க எளிமையும், உற்றுநோக்கலின் சிறப்பை, இன்றியமையாமையை வலியுறுத்தும். எல்லாத் துறைகளுக்கும் பயன்படும்வண்ணம் உற்றுநோக்கல் உள்ளது.

## 7.8.1. உற்றுநோக்கலில் உள்ள இடர்ப்பாடுகள்

இயற்கை மாறுதலுக்கு உட்பட்டது. எனவே, ஒன்று நடைபெற்ற இடத்தில் உற்றுநோக்குவது முழுவதும் எதிர்பார்த்த பயனை நல்குவதில்லை. திட்டமிட்ட, முன்னரே ஏற்பாடு செய்த ஒன்றாக இதனைச் செய்வது எளிய செயலன்று. அனைத்துமே உற்றுநோக்குவதற்கு ஏற்றனவாக இருப்பதில்லை. தம்முடைய செயல்களை வெளியார் ஒருவர் கண்காணித்து உற்றுநோக்க, அந்தக் குறிப்பிட்ட குழுவினரோ, மனிதனோ இடம் தருவதில்லை. எனவே பெரும்பாலான தனிமனிதச் செயல்கள் வெளியாரின்

Scanned by TapScanner

உற்றுநோக்கலுக்கு இடந்தருவன அல்ல. எடுத்துக்காட்டாக, மலைவாழ் மக்களின் மணவாழ்க்கை பற்றி அறிய ஒருவர் சென்றால், தம்முடைய அந்தரங்கங்களை ஆய்வாளர் உற்றுநோக்க எந்த மணமக்களும் அனுமதிக்க மாட்டார்கள். குழுக்களாகக் கூடும் பொது நிகழ்ச்சிகளின் போது மட்டுமே ஆய்வாளர் அவர்களை உற்றுநோக்க முடியும். இதனால் உற்றுநோக்கல் வரையறைக்குட்பட்டதாகிறது.

7.8.2. ஆய்வாளர் முன்கூட்டியே திட்டமிட்டு உற்றுநோக்கக் காத்திருப்பினும்கூட அவர் எதிர்பார்த்த நேரத்தில், இடத்தில் நிகழ்ச்சிகள் நிகழா. எல்லாவற்றையும் ஆய்வாளர் உற்றுநோக்க இயலாது. அவர் காத்திருக்கையில் அவை நிகழாததும், அவை நிகழ்கையில் அவர் அங்கு இல்லாததும் இயற்கையாகப் பல சமயம் நிகழும். சான்றாக, பெற்றோர்கள் திட்டும்போது அல்லது அடிக்கும்போது சிறு குழந்தைகளின் எதிர்ச்செயல்கள் எப்படி உள்ளன என்று ஒருவர் ஆராய்வதாகக் கொள்வோம். பெற்றோர் ஒருவித மறுப்புமின்றி இவற்றை உற்றுநோக்க ஆய்வாளரை அனுமதித்தாலும், அச்சந்தர்ப்பத்தில் குழந்தை ஒருவித எதிர்ச்செயலும் செய்யவில்லை என்பது அடிக்கடி நிகழும். ஆய்வாளர் இல்லாத சில சமயங்களில் குழந்தைகள் எதிர்ச்செயல் புரியும்.

7.8.3. மனித மன உணர்வுகள், மெய்ப்பாடுகள், எதிர்ச் செயல்கள் போல்வனவற்றை உற்றுநோக்கலால் அறியமுடியாது. எனவே, அங்கு இம்முறை பயன்படாது. அத்தகையனவற்றை அறிய, பேட்டியோ, நிகழ்வு ஆய்வோதான் பயன்படும்.

7.9. இத்தகு இடர்ப்பாடுகள் இருப்பினும் இவற்றை எதிர்நோக்கி வெற்றிகண்டபின் இம்முறை ஆய்விற்குப் பெரிதும் பயன்படுகின்றது. எனவேதான் அனைத்து ஆய்வுகளிலும் இம்முறை பலராலும் வலியுறுத்தப்படுகிறது.

Scanned by TapScanner

# 8

# வினாநிரலும் பட்டியலும்
# (Questionnaire and Schedule)

## *8.1.1.* முன்னுரை

சமூக ஆய்வில் பயன்படுத்தப்படும் இரு முக்கிய கருவிகள் வினாநிரலும், பட்டியலும் ஆகும். கள ஆய்வு மேற்கொண்டு தரவுகளைத் திரட்டுகையில் இவ்விரு முறைகளும் பின்பற்றப் படுகின்றன. பெரும்பாலும் அளந்தறியும் ஆய்வுகளுக்கு மிகுதியான பணி நடக்கவேண்டிய களங்களில் முன்னோட்டமாக மாதிரி ஆய்வு நிகழ்த்துகையில் இவ்விரண்டும் பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தனிப்பட்ட ஆட்களின் கருத்துக்கள், சமூகப்போக்குகள், நம்பிக்கைகள், இயல்புகள், அபிப்பிராயங்கள், குழு நடைமுறைகள், பழக்கவழக்கங்கள் ஆகிய இவை போன்ற தரவுகளைத் திரட்டுவதற்கு இவ்விரு முறைகளும் பயன்படுத்தப்படும். பரந்துபட்டதும், வெவ்வேறானதும், பரவலாக ஆங்காங்கே வாழ்வதும் ஆகிய மக்கள் கூட்டத்தை அணுகி, தரவுகளைத் திரட்டுவதற்கு இவ்விரு கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. தொகுக்கப்பெறும் தரவுகளின் தரம் சிறந்ததாக அமைய இம்முறைகள் பெரிதும் பரிந்துரைக்கப்படுகின்றன.

*8.1.2.* வினாநிரல் என்பது, ஆய்வாளர் தகவலாளியிட மிருந்து பெறவிரும்பும் தரவுகளை வினாநிரல் வடிவில் ஒன்றன்பின் ஒன்றாக அமைத்து (அச்சிட்டு அல்லது தட்டச்சு செய்து அல்லது மையொற்றுப் படிவத்தில் அமைத்து அல்லது கையால் எழுதி) அத்துடன் தம்முடைய இணைப்பு மேலுறை மடல் ஒன்றையும் வைத்து அஞ்சல் வழியே தகவலாளிக்கு அனுப்பிவிடுவது ஆகும். வினாநிரல் என்றாலே அது அஞ்சல்

Scanned by TapScanner

வழியே அனுப்பிவிடுவதையே குறிக்கும், தகவலாளி அவ்வினா நிரலைப் பெற்றதும் வினாக்களுக்குரிய விடைகள், அவை பற்றிய விரிவான விளக்கங்கள் ஆகியவற்றை அப்படிவத்திலே எழுதி அதனை மீண்டும் ஆய்வாளருக்கு அஞ்சலில் அனுப்பிவிட வேண்டும்.

8.1.3. பட்டியல் என்பது வினாக்கள் நிறைந்த பட்டியலை ஆய்வாளர் தாமே எடுத்துவந்து தகவலாளியிடம் கொடுத்து தகவலாளியைக் கொண்டு - அல்லது தாமே அவரிடம் கேட்டு விடைகளை நிறைவு செய்துகொள்வது ஆகும். வினாநிரல் அஞ்சலில் வரும்; தகவலாளியே நிறைவு செய்து அதை ஆய்வாளருக்கு அனுப்பவேண்டும். பட்டியல்முறையில் ஆய்வாளர் அதைத் தாமே எடுத்துவந்து தகவலாளியிடம் கொடுத்து, வினாக்களை விளக்கி அதன் பிறகு தகவலாளி விடைகளை எழுதுகையில் உடனிருந்து (தகவலாளி எழுதாமல் விடைகளைச் சொல்ல ஆய்வாளர் / குறிப்பெடுக்கும் துணையாளர் எழுதிக் கொள்வதும் உண்டு) அவற்றைப் பெற்றுச் செல்வார். வினா நிரலில் தகவலாளி ஆய்வாளரின் துணையின்றி வினாக்களைப் படித்து விளங்கிக்கொண்டு விடைகளை நிரப்புகிறார். பட்டியலில் ஆய்வாளர் தகவலாளியின் அருகிலே இருக்கிறார். பட்டியல் முறையில் ஆய்வாளர்க்கும் தகவலாளிக்கும் நேரடித் தொடர்பு இருக்கிறது. பட்டியல் முறையில் நேரடியான வினாக்களும் அவற்றுடன் பட்டியல் வடிவில் சிலவும் இருக்கும். பட்டியல் எண் இட, குறியீடு இட மட்டுமே இடம் தரும். சில வினாக்களுக்காக இவ்வாறு பட்டியல் முறையும் இடம்பெறும். வினாநிரல், பட்டியல் என முறை எதுவாக இருப்பினும், தகவலாளி அதனைத் தெளிவாகப் புரிந்துகொண்டு (ஆய்வாளர் எந்தச் செய்தியைப் பெறுவதற்காக அதை அமைத்தாரோ அதனைப் புரிந்துகொண்டு, மயக்கமின்றி விடைதருமாறு) விடை தருவதுதான் இக்கருவியின் அடிப்படை நோக்கம்.

8.1.4. பரந்த அளவில், பெருவாரியான மக்களிடமிருந்து தரவுகளைத் திரட்ட இவ்விருமுறைகளும் பயன்படும். வினாக்கள் பல்வேறுபட்டவை - பலதரப்பட்டவை. திட்டமிட்டு முற்கூட்டியே வினாக்களை அமைத்துக்கொண்டு செல்கையில் தான் கூடுதலாகத் தரவுகளைத் திரட்டலாம். திரட்டப்பட்ட தரவுகள் சரிதானா என்று காணவும் இம்முறைகள் உதவும். பேட்டி என்னும் அடுத்த முறைக்கும் இவை துணைசெய்யும். வினாக்களை அமைத்துக்

Scanned by TapScanner

கொள்ளும் பயிற்சி, பேட்டிக்குத் துணைசெய்யும். அமைக்கப்படும் வினாக்கள் எளிதிலும் தெளிவாகவும் தகவலாளிக்குப் புரியுமாறு இருத்தல் வேண்டும். ஆய்வுத்தலைப்பிற்குத் தொடர்பான முதல்நிலைச் சான்றுகளாக அமையவல்ல கூறுகளைப் பெறுவதற்கு இவ்விருமுறைகளும் பெரிதும் துணை செய்யும். வினாக்களை அமைப்பதில் திட்டமிட்ட கவனத்தை ஆய்வாளர் செலுத்தினால் மிக்க பயன்தருவதாக இம்முறைகள் அமையும். குறைந்த காலத்தில் தெளிவான முறையில் ஆய்வைச் செய்யப் பட்டியல் முறை துணைசெய்யும். நாம் வாழும் இன்றைய உலகம் அவசரமான இயந்திர உலகம். பெருவாரியான தகவலாளியிடம் இருந்து தரவுகளைத் திரட்டுவதற்குப் பட்டியல் முறை பெரிதும் துணைசெய்யும்.

8.1.5. நிகழ்வாய்வில் பலருக்கும் இவ்விருமுறைகளும் பயன்பட்டு வருகின்றன. சமுதாயவியல் ஆய்வாளருக்கு மட்டுமன்றி, நாட்டுப்புறவியல், இதழியல் போன்ற துறைகளிலும் இவ்விருமுறைகளையும் ஆய்வாளர் பயன்படுத்தி வருகின்றனர். அண்மைக்காலங்களில் இலக்கிய ஆய்வுகளிலும் ஆய்வாளர் இவ்விருமுறைகளையும் பயன்படுத்தத் தலைப்பட்டுள்ளனர்.

### 8.2.1. நோக்கம்

இவ்விரு ஆராய்ச்சி முறைகளும் தற்சார்பின்மையை அடைவதை நோக்கமாகக் கொண்டவை. தகவலாளிகள் அனைவரிடமும் கொடுக்கப்பெறும் வினாநிரலிலோ பட்டியலிலோ ஒரே மாதிரியான வினாக்கள் ஒரே மாதிரியான மொழியில் கொடுக்கப்பட்டிருக்கும். வினாக்களை அமைத்திருக்கும் வரிசைமுறையும் ஒரே தன்மையில் இருக்கும். எனவே, கிடைக்கும் விடைகளை ஒப்பிட்டுக் காணவும், உறழ்ந்து காணவும் இயலும். வினாக்களின் வரிசைமுறையையோ வினாக்களை அமைத்துள்ள மொழியையோ சிறிது மாற்றினாலும், ஒரே வினாவிற்கு மாறுபட்ட மக்களிடம் இருந்து மாறுபட்ட விடைகள் கிடைப்பதாக நிறுவியுள்ளனர். எனவே, மாற்றம் செய்தல் கூடாது.

8.2.2. வினாநிரல் அல்லது பட்டியல் இன்றி வெறுமனே வினாக்களைக் கேட்கத் தலைப்பட்டால், கேட்கும் ஆய்வாளர் பதிலிறுக்கும் தகவலாளி ஆகிய இருவருமே கதைக்க முற்படலாம்.

தேவையான, இன்றிமையாச் செய்திகள் விடுபட்டுப் போகலாம். தேவையற்ற தரவுகள் திரட்டப்படலாம்.

8.2.3. பெற்ற தரவுகளை அட்டவணைப்படுத்த, பகுத்து ஆராய ஆகியவற்றிற்குப் பட்டியல்முறை பெரிதும் துணை செய்யும். பட்டியல்முறை அல்லது வினாநிரல் முறையிலன்றி வெறுமனே உரையாடித் தரவுகளைத் திரட்டியவர் அவற்றைப் பகுப்பதும் அட்டவணைப்படுத்துவதும் கடினமான பணிகளாகி விடும்.

## 8.3.1. வினாநிரலின் வகைகள்

வினாநிரல்களைக் **கட்டமைப்புடைய வினாநிரல்** (Structured Questionnaire), **கட்டமைப்பில்லா வினாநிரல்** (Unstructured Questionnaire) என்று இருவகையாகப் பகுப்பர்.

8.3.2.1. முன்கூட்டியே ஆழமாகச் சிந்தித்து, ஆய்வாளர் வினாக்களை அமைத்து அவற்றை வகை தொகை செய்து கொண்டு ஆய்வுக்களத்திற்குச் சென்றால், அவ்வகை வினா நிரலைக் **கட்டமைப்புடைய வினாநிரல்** என்பர். "தெளிவான, வரையறுத்த, முன்னரே உருவாக்கப்பட்ட வினாக்களைக் கொண்டது கட்டமைப்புடைய வினாநிரல் ஆகும்" என்று இதற்கு வாஜ்பாய் விளக்கம் தருகிறார்.[1] இத்துடன், போதுமானதாக அமையாத அல்லது மிகுதியும் விளக்கமானதாக அமைந்து குறைக்கப்படவேண்டிய விடைகளை உடைய வினாக்களையும், கூடுதலான வினாக்களையும் இவ்வகை வினாநிரலில் காணலாம். தேவை ஏற்படும்பொழுது இக்கூடுதல் வினாக்களை ஆய்வாளர் பயன்படுத்திக் கொள்வார். முதன்முதலாக மேற்கொள்ளும் விசாரணையிலும், திரட்டப்பட்ட தகவல்களை ஒத்திட்டுக் காண்பதற்காக மேற்கொள்ளும் ஆய்விலும் பரந்த அளவை உடைய ஆய்வுத்திட்டங்களிலும் கட்டுப்பாடுடைய வினாநிரல் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. சமூக, பொருளாதார ஆய்வுகளிலும் பொது நிகழ்ச்சிகள் பற்றிய மக்களின் கருத்து களைத் திரட்டுவதற்குரிய ஆய்வுகளிலும், நடைமுறை அரசியல் - அரசியல் மாற்றம் பற்றிய ஆய்வுகளிலும் இவ்வகை வினாநிரல் பயன்படும். மேலும், மக்களின் வாழ்க்கைத்தரம் குறித்து மேற்கொள்ளப் பெறும் ஆய்வு, நுகர்வோர் செலவுக் குறியீட்டு எண் பற்றிய ஆய்வு, குழந்தைகள் நலம், பொதுமக்களின் நல்வாழ்வு போன்ற எண்ணற்ற ஆய்வுகள் ஆகியவற்றிலும் இவ்வகை வினாநிரலைப் பயன்படுத்தி வருகின்றனர்.

Scanned by TapScanner

8.3.2.2. மக்களிடையே காணப்படும் நாளிதழ் படிக்கும் ஆர்வம்பற்றிய ஆய்வு, நாளிதழ், வாரஇதழ், மாதஇதழ் போன்ற இதழ்களில் வெளியாகும் பல்வேறு பகுதிகள் பற்றிய பொதுவான, சிறப்பான ஆய்வுகள், இதழ்களில் வெளியாகும் குறிப்பிட்ட சிக்கலைப் பற்றிய சிறுகதை, நாவல், கவிதை பற்றிய ஆய்வுகள், விளம்பரங்களில் மகளிர் இடம்பெறும் போக்கு பற்றி வாசகர் - பெண்வாசகர், ஆண்வாசகர், எண்ணங்களைத் திரட்ட மேற்கொள்ளும் ஆய்வு ஆகிய பல தன்மைகளில் நிகழ்த்தப்பெறும் இதழியல் சார்ந்த இலக்கிய ஆய்வுகளுக்கு இவ்வகை வினாநிரல் முறையைப் பயன்படுத்தி வருகின்றனர். சிறுகதை, நாவல், கவிதை, நாடகம்பற்றிய ஆய்வுகளுக்கும், தெருக்கூத்து, கரகம், வில்லுப்பாட்டு, பொய்க்கால் குதிரை ஆட்டம் போன்ற நாட்டுப்புறக்கலைபற்றிய ஆய்வுகளுக்கும், பார்வையாளர், கலைஞர் ஆகிய இருவர்தம் சிந்தனைகளையும் அறிய இவ்வகை வினாநிரலைப் பயன்படுத்தலாம். இலக்கிய ஆய்வில் கூறப்படும் முடிவுகளைச் சான்றாதாரங்களுடன் புள்ளிவிவர முறையில் கூறி, ஆய்வாளர் தம் கருத்தை நிறுவ - அறிவியல்நெறியில் நிலைநாட்ட இவ்வகை ஆராய்ச்சி முறைகள் - வினாநிரல் முறை - பெரிதும் துணைசெய்கின்றன.

8.3.3. வரையறுத்த வடிவமுடைய வினாநிரல் (Closed End Questionnaire) என்று வினாநிரலை மேலும் இருவகையாகப் பகுப்பர். இப்பகுப்பு வினாக்களுக்குக் கிட்டும் விடைகளை வைத்துச் செய்யப்பட்டது. விடைதரும் தகவலாளி, அவன் விருப்பம்போல் விடைதருவதற்கு ஏற்ப அமைந்திருப்பின், அது பரந்த வடிவமுடைய வினாநிரல் ஆகும். பொதுவாகத் தொடக்கநிலையில் தரவுகளைத் திரட்ட இவ்வகை பெரிதும் துணைசெய்யும். வரையறுத்த வடிவமுடைய வினாநிரல் அமைக்க இது உதவும். குறிப்பிட்ட வினாக்களுக்கு, விடை தரும்போது இப்படித்தான் விடைதரவேண்டும், இவ்விடைகளுக்குள் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் குறியிட வேண்டும் என்னும் வரையறை எதையும் தகவலாளிக்கு ஆய்வாளர் விதிக்க மாட்டார். தொடக்கநிலை ஆய்வுகளுக்கு வரையறுத்த எண்ணிக்கை உடைய தகவலாளிகளிடம் தகவல்களைத் திரட்டுவதற்கு, புதிய சிக்கல், சூழல் பற்றிய ஆய்வுகளுக்கு இவ்வகை வினாநிரலைப் பயன்படுத்துகின்றனர். சில சமயங்களில் இவ்வகை வினாநிரலில் தகவலாளிகளிடம் குறிப்பிட்ட ஆய்வுப்பொருள் பற்றி அவர்களது

கருத்துகளைப்பற்றிய கட்டுரை வடிவச் சிறுகுறிப்புக்கள், அப்பொருளுடன் தகவலாளர்க்குள்ள உறவுகள், போக்குகள், விவரமான பிற தகவல்கள் என்று பரந்த செய்திகளை ஆய்வாளர் கேட்கலாம். எந்த நிலையிலும் தகவலாளிகளை வரையறைக்குட் படுத்தாமல் அமையுமாறு வினாக்களை அமைப்பது இப்பரந்த வடிவமுடைய வினாநிரலின் சிறப்பாகும். எடுத்துக்காட்டாக, மக்களிடையே காணப்படும் இதழ் படிக்கும் ஆர்வத்தைக் கணக்கெடுத்திட ஆய்வை மேற்கொள்ளும் ஆய்வாளர்,

1. உங்களுக்குப் பிடித்தமான வார இதழ் எது? ஏன்?
2. அவ்வார இதழில் எப்பகுதி உங்களைக் கவர்ந்தது? ஏன்?
3. எப்பகுதியை மாற்றலாம் என எண்ணுகிறீர்கள்? காரணங்களை 5 வரிகளில் தருக.

என்பன போன்று அமைக்கும் வினாக்களைக் கூறலாம்.

### 8.3.4.1. வரையறுத்த வடிவமுடைய வினாநிரல்

இது, மேற்கூறிய பரந்த வடிவத்திற்கு மாறுபட்டது. இவ்வகை வினாநிரலில், வினாக்களுக்குக் கீழே அவற்றிற்குரிய விடைகள் பல வரிசையாகத் தரப்பட்டிருக்கும். பொருத்தமான விடையைத் தகவலாளி, குறியிட்டோ (****), எண் இட்டோ காட்ட வேண்டும். வகைப்படுத்த வேண்டிய நிலையில் தரவுகளைத் திரட்டுவதற்கு இவ்வகை வினாநிரல் பயன்படும். தெளிவான, வரையறுத்த வகைகளில் தரவுகளை அமைக்க ஆய்வாளர் இவ்வகை வினாநிரலைப் பயன்படுத்துவர். முற்கூறியபடி, முதனிலையில் திரட்டிய தரவுகளை மேலும் வகைசெய்ய, ஒத்திட்டுச் சரிபார்க்க இவ்வகை வினாநிரலைப் பயன்படுத்துவர். பதிலிறுக்கும் தகவலாளி, கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் கீழுள்ள விடைகளுள் சரியான ஒன்றை, அச்சூழலுக்கு ஏற்பக் குறியிடுவர். இதற்கு மட்டும் இவ்வகை வினாநிரலில் வாய்ப்புண்டே தவிர, தகவலாளி தன் கருத்து களைக் கூற இவ்வகையில் இடம் இல்லை. மக்கள் கணக்கெடுப்பு, வீட்டுவசதிகள் பற்றிய ஆய்வு போன்றவற்றில் இம்முறை - இவ்வகை வினாநிரல் முறை - பெரிதும் பயன்படுத்தப் படுகிறது. சான்றாக, குமுதம் வாரஇதழில் உங்களைக் கவர்ந்த பகுதி

Scanned by TapScanner

1. தலையங்கம்
2. தொடர்கதை
3. சிறுகதை
4. நகைச்சுவைத் துணுக்குகள்
5. பிற துணுக்குகள்
6. கேலிச் சித்திரம் (கார்ட்டூன்)
7. அரசு கேள்வி பதில்

என்று உருவாக்கப்படும் வினாநிரலைக் கூறலாம். முற்கூறிய அனைத்து இலக்கிய ஆய்வுகளுக்கும் இவ்வகை வினாநிரலைப் பயன்படுத்தலாம். குறிப்பிட்ட ஆசிரியர் ஒருவரின் நடையை எவ்வாறு இனம் காணுகின்றனர் என்று ஆராயும் ஆய்வாளர் இவ்வகை வினாநிரலைப் பயன்படுத்துவர்.

8.3.4.2. ஆய்வை மேற்கொண்டவுடன், கருதுகோள் சரியாக உருவாக்கப்படாத நிலையில், எவ்வகையில் தரவுகளைத் திரட்டுவது என்று முடிவு செய்யாதபோது, பரந்த வடிவமுடைய வகையைப் பயன்படுத்தலாம். தெளிவாக வரையறுத்துக்கொண்டு செயல்படா நிலையில், ஆய்விற்கு விளக்கக் கருவியாக இவ்வகை பயன்படும். வளர்ந்த நிலையில் ஆய்விற்குப் பெரிதும் பயன்படுவது வரையறுத்த வடிவமுடைய வகையேயாகும்.

### 8.3.5. பட வினாநிரல் (Pictorial Questionnaire):

இவ்வகையில் வினாக்களின் கீழே விடைகளாகப் பல படங்கள் தரப்பட்டிருக்கும். சரியான விடையாக அமையவல்ல படத்திற்கு நேரே குறியிடவோ (*)அல்லது அப்பட எண்ணைக் குறிக்கவோ வேண்டும் என்று தகவலாளிக்கு ஆய்வாளர் வேண்டுகோள் குறிப்பு எழுதியிருப்பார். வினாக்களுக்கு விடைதரும் தகவலாளிக்கு விடைதருவதில் ஒருவித ஆர்வம் ஏற்படுவதை இவ்வகை வினாநிரலில் காணலாம். முற்கூறிய வரையறுத்த வடிவமுடைய வினாநிரலின் துணைவகை என்று இதனைக் கூறலாம். வரையறுத்த வடிவமுடைய வினாநிரலில் எழுத்து வடிவில் விடைகள் இருக்க, இவ்வகையில் படங்களாக விடைகள் அமைந்திருக்கும். தகவலாளி, படிக்கத் தெரியாதவராக இருப்பின் அவரிடம் இருந்து தரவுகள் திரட்ட இப்பட

Scanned by TapScanner

வினாநிரல்வகை பெரிதும் துணைசெய்யும். சிறுவர், சிறுமியர் களிடம் தரவுகளைத் திரட்ட இவ்வகை பெரிதும் துணை செய்யும். தேர்தலில் பயன்படுத்தப்படும் வாக்குச் சீட்டுகளில் வேட்பாளர் பெயரும் சின்னமும் (படமும்) இருக்க, படங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து முத்திரையிடும் முறை இதற்குச் சரியான சான்றாகும்.

*8.3.6.1.* கட்டமைப்பில்லா வினாநிரல் என்பதைப் பேட்டியின் வழிகாட்டி (interview guide) என்று பெரும்பாலும் குறிப்பிடுவர். வளைந்து கொடுக்கும் தன்மை இவ்வகை வினாநிரலின் அடிப்படைப் பண்பாகும். மிகவும் எளிதாகத் தரவுகளைத் திரட்ட இவ்வகை பயன்படுகிறது. ஆய்வாளர், களத்திற்குச் சென்றவுடன் அந்த நேரத்தில் வினாக்களைக் கேட்பது இவ்வகை வினாநிரலின் இயல்பாகும். களச்சூழலுக்கு ஏற்றவாறும், மக்களின் - தகவலாளிகளின் - விருப்பு வெறுப்பு களைப் புரிந்துகொண்டும் கொள்வனவற்றைக் கொண்டு தள்ளுவனவற்றைத் தள்ளி வினாக்களைக் கேட்க இவ்வகை வினாநிரல் வழிசெய்கிறது. அதனால்தான் வளைந்து கொடுக்கும் தன்மையே இதன் தலையாய பண்பு என்று கூறுகிறார் யங்.[2] தேர்ந்தெடுத்த, குறிப்பிட்ட எண்ணிக்கைகளை உடைய வரையறுத்த நிகழ்வுகளுக்கே இவ்வகை வினாநிரல் துணை செய்யும். ஆயினும் ஆழமான தரவுகளைத் திரட்டும் நுணுக்க ஆய்வுகளில் இவ்வகை வினாநிரல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. குடும்பக் குழுக்களிடையே காணப்படும் இணைவு, தனிப்பட்ட அனுபவங்கள், நம்பிக்கைகள், போக்குகள் ஆகியன பற்றிய ஆய்வுகளுக்கு இவ்வகை வினாநிரல் பயன்படுகிறது. வினாக்களை அமைப்பதில் திட்டமிட்ட தன்மை காணப்படாததால், ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய முறையில் தரவுகளைத் திரட்டுவது என்பது இவ்வகை வினாநிரலில் இயலாத ஒன்றாகும். பயன்படாத தரவுகள், ஆய்விற்குத் துணைநிற்காத தரவுகளைத் திரட்டும் இடர்ப்பாடும் கட்டமைப்பில்லா வினாநிரல் முறையில் உள்ளது.

*8.3.6.2.* கட்டமைப்புடைய வினாநிரலில் வினாக்கள் முற்கூட்டியே உருவாக்கப்பட்டு ஆய்வுத்தரவுகளை நல்குபவர் களுக்கு அனுப்பப்படும். எனவே, அதில் அனைத்துத் தகவலாளி களுக்கும் வினாக்கள், அவற்றைத் தொகுத்துள்ள முறை, வரிசை எண், வைப்புமுறை, வினாக்களில் பயன்படுத்தியுள்ள மொழி,

சொல்லமைப்பு என்ற அனைத்துக் கூறுகளும் ஒன்றுபோல இருக்கும். ஆனால் கட்டமைப்பில்லா வினாநிரலில் இம்முறை மாறுபடலாம். தகவலாளிகளைக் கண்டதும் வினாக்களை உருவாக்கிக் கொடுப்பதால் இத்தகு கட்டமைப்பு, திட்டமிட்ட உருவாக்கமுறை இதில் இடம்பெறாது.

## 8.4.0. பட்டியலின் வகைகள்

### 8.4.1. உற்றுநோக்கி நிரப்பும் பட்டியல் (Observation Schedule)

ஒரு தனிமனிதர் அல்லது குழுவின் சமூகப் பழக்கவழக்கம், ஒழுகலாறு, செய்கைகள், சூழ்நிலை ஆகியவற்றைப் பதிவு செய்து வகைப்படுத்த இவ்வகைப் பட்டியல் உதவும். ஒரே மாதிரியான தன்மை, திட்டமிட்ட பாங்கு ஆகியவற்றுடன் கூடிய தரவுகளைத் திரட்ட இவ்வகை உதவும். ஓர் ஆய்வாளர் ஆயினும், பலர் ஆயினும் ஒன்றுபோலத் தரவுகளை இதில் திரட்டலாம். ஒழுங்குபடுத்தப்பட்டதும் அதே நேரத்தில் அளவில் மிகுதியானதுமான தரவுகளைத் திரட்ட இவ்வகைப் பட்டியல் பெரிதும் உதவும். ஆய்வின் பரப்பை வரையறைக்குட் படுத்தி, தேர்ந்தெடுத்தவற்றில் ஆழ்ந்த கவனத்துடன் செயல் பட்டுத் தரவுகளைத் திரட்ட இவ்வகைப் பட்டியல் உதவும். உற்றுநோக்கலில் இவ்வகைப் பட்டியல்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் உற்றுநோக்கலே நுணுக்கமான பார்வைக்குரியதாகிவிடும்.

### 8.4.2. ஆவணப் பட்டியல் (Documnent Schedule)

ஆவணங்கள், நிகழ்வு வரலாறுகள்(case histories) போன்ற வற்றிலிருந்து தரவுகளைத் திரட்டுவதற்குப் பெரிதும் இவ்வகைப் பட்டியல் பயன்படுகிறது. மிகப்பரந்த அளவிலான நிகழ்வு வரலாறுகளிலிருந்து ஒன்றுபோல் விளங்கும் தரவுகளைத் தொகுத்து அவற்றிலிருந்து தரவுளைத் திரட்ட, அவற்றை அளந்தறிய இவ்வகைப் பட்டியல் பெரிதும் துணைசெய்யும். சமூகக் குற்றவாளிகள் பற்றிய ஆவணங்களைப் பயன்படுத்தி அவற்றிலிருந்து தரவுகளைத் திரட்டும் சமூக ஆய்வாளர் உருவாக்கும் ஆவணப்பட்டியல் இவ்வகைக்குச் சிறந்த சான்றாகும். குற்றங்களின் வகைகள், குற்றவாளிகளின் வயது, பள்ளியைவிட்டு விலகிய வயது, காலம், குற்றத்தொழிலில் ஈடுபட்ட வயது, காலம் போன்ற பல தரவுகளைத் திரட்ட

Scanned by TapScanner

இவ்வகைப் பட்டியலைப் பயன்படுத்துவர். மிகுதியான ஆவணங்களைப் பார்த்து ஆய்ந்து குறிப்பெடுப்பதன் மூலம் திரட்டப்படும் தரவுகள் அளந்தறியத்தக்க தரவுகளாக அமையும். ஆவணப்பட்டியல் என்பது வெறுமனே குறியிடும் தாளாக மட்டும் அமைவதில்லை. திரட்டிய தரவுகளை உடனுக்குடன் அட்டவணைப்படுத்துவதும், ஒரு நிகழ்வு ஆவணத்திற்கு ஒரு பட்டியல் என்று திட்டமிட்டுப் பயன்படுத்துவதும் இன்றியமையாதன.

**8.4.3. ஆவணப் பரப்பளவுப் பட்டியல் அல்லது மதிப்பீட்டுப் பட்டியல் (Institutional Survey Form or Evaluation Schedule)**

பெரும் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் போன்றவை தம் தொழிலாளர் பிரச்சினைகளை ஆராய இவ்வகைப் பட்டியலைப் பயன்படுத்துகின்றன. நகர மக்களின் சிக்கல்களைப் பரப்பாய்வு செய்ய, கல்வி நிறுவனங்களில் மாணவர், ஆசிரியர், அலுவலர் பிரச்சினைகளை ஆராய, கல்வியின் தரம், தேர்வு பற்றிய சிக்கல்களை ஆய்ந்தறிய இம்மதிப்பீட்டுப் பட்டியல் பெரிதும் துணைசெய்யும்.

**8.5. நல்ல வினாநிரல் பட்டியல் ஆகியவற்றின் அடிப்படை,**

வினாநிரலும் பட்டியலும் நல்ல முறையில் அமைய, ஆய்வாளர் தரவுகளைத் திரட்டுவதற்குச் செய்திகளைத் தெரியப்படுத்துவதிலும் செய்திகளைத் தெரிந்துகொள்வதிலும் சரியான தன்மை இருத்தல் வேண்டும். அதாவது ஆய்வாளரும் நல்ல முறையில் வினாக்களைத் தொடுக்க வேண்டும். தகவலாளிகளும் தம் பொறுப்பை உணர்ந்து வினாநிரலையும் பட்டியலையும் நிரப்ப வேண்டும். ஆய்வாளர் தம் நிலையில் வினாக்களை நன்கு உருவாக்கி, கவனமுற அமைக்க வேண்டும். தகவலாளி மயக்கமுறா வண்ணம், ஆய்வாளர் எத்தகைய உணர்வை மையமிட்டு வினாவை அமைக்கிறாரோ, அதே உணர்வு தகவலாளிக்கும் எழுப்பப்படுமாறு வினா இருத்தல் வேண்டும். வினாக்களை உருவாக்குவதில்தான் அடிப்படையான வெற்றி உள்ளது. சரியானமுறையில் சொற்களைப் பயன்படுத்தி, இரு பொருளோ பல பொருளோ பயக்கின்ற சொற்கள் இன்றி வினாக்கள் இருத்தல் வேண்டும். தகவலாளி, வினாக்களைப் படித்து விடை தருகையில் எவ்வித விருப்பு வெறுப்பிற்கும் ஆட்படாது நடுநிலையில் நின்று சரியான தரவுகளை அளித்தல்

Scanned by TapScanner

வேண்டும். ஆய்வாளருக்குத் தகவலாளி சரியான தரவுகளைத் தந்து ஒத்துழைப்பதன் மூலம் ஆய்வை வெற்றிபெறச் செய்கிறார்.

### 8.6.1. வினாநிரல் - பட்டியல் உருவாக்கும் முறை

மேற்கொள்ளும் ஆய்வின் தன்மைக்கு ஏற்ப வினாநிரல் - பட்டியல் ஆகியவற்றின் வடிவமும் அமைப்பும் அமையும். முதல் நிலையில், தாம் மேற்கொண்டுள்ள ஆய்வுச்சிக்கல்களின் பல்வேறு தன்மைகள் என்னென்ன என்று ஆய்வாளர் எண்ணிப்பார்க்க வேண்டும். மீண்டும் மீண்டும் ஆய்வுப் பொருளில் உழன்று, நீளநினைந்து பல கூறுகளையும் இணைத்துப் பார்ப்பதால் நல்ல வினாநிரலை - பட்டியலை ஆய்வாளர் உருவாக்க முடியும். எடுத்துக்காட்டாக, அலுவல் பார்க்கும் பெண்களின் நிலை தமிழ்ச் சிறுகதைகளில் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது என்று ஆராய்கிறார் ஓர் ஆய்வாளர் என்று கொள்வோம். குடும்பப் பொறுப்பு, இல்லற வாழ்க்கை, கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம், வீட்டுப்பணிகளைச் செய்யும் நிலை, குழந்தைகளைப் பேணுதல், உடல் நலம், பொருளாதார நிலை, அலுவலகச் சூழல் என்பன போன்ற பல்வேறு தன்மை களையும் தனித்தனியே விளக்கமாக ஆராயவேண்டும் என்று ஆய்வாளர் எண்ணிப்பார்க்க வேண்டும்.

8.6.2. அடுத்த நிலையில், ஒவ்வொரு நோக்கிலும் எத் தன்மையை மிகுதியாகக் கவனிக்க வேண்டும் என்று காண வேண்டும். ஆய்வின் கருதுகோளை நிறுவுமாறு அல்லது மறுக்குமாறு பொதுமைப்படுத்தி முடிவுகூறுவதற்கு ஏற்பத் தரவுகளை எவ்வாறு திரட்டுவது என்று எண்ண வேண்டும். அதற்கேற்ப எதனை மையமிட்டு வினாக்களை ஒவ்வொரு நோக்கிலும் உருவாக்க வேண்டும் எனவும் ஆய்வாளர் எண்ண வேண்டும். ஒவ்வொரு நோக்கையும் பல பகுதிகளாகப் பகுத்து, அந்நோக்கைப் பரந்த, முழுமையான அளவில் வெளிப் படுத்துமாறு ஆராயவேண்டும்.

8.6.3. மூன்றாவது நிலையில், வினாக்களை உருவாக்க வேண்டும். வினாக்களைச் சரியான வடிவிலும் எண்ணிக்கை களிலும் உருவாக்க வேண்டும். வினாநிரலின் / பட்டியலின் அமைப்பும் வடிவமும் தகவலாளியின் கவனத்தை ஈர்ப்பதாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு நோக்கிற்கும் ஒன்றுக்கு

Scanned by TapScanner

மேற்பட்ட வினாக்களை அமைக்க வேண்டும். ஆய்வாளர் எண்ணிய அதே உணர்வை வெளிப்படுத்துகிறதா, தகவலாளி புரிந்து பின்பற்றும்வண்ணம் உள்ளதா, தயக்கமின்றிப் பதில் தருவதற்கு ஏற்ப உள்ளதா, நடுநிலையான தரவுகள் தருமாறு உள்ளதா என்று பல்வேறு நிலைகளிலும் ஆய்வாளர் வினாக்களை எண்ணிப்பார்த்து ஆழ்ந்த கவனத்துடன் உருவாக்கவேண்டும்.

8.6.4. வினாநிரலிலும் பட்டியலிலும் வினாக்களை அமைக்கும் பொதுவான அமைப்பையும் வரிசைப்படுத்தும் முறையையும் அடுத்து எண்ணிப்பார்க்க வேண்டும். வினாநிரல்/ பட்டியல் இவற்றின் வடிவமே இன்றியமையாதது. மிக்க கவனத்துடன் ஆய்வாளர் வடிவம் தரவேண்டும். நன்கு தெளிவாக வரிசை மாறாமல், தொடர்புடையதாக, தகவலாளியின் கவனத்தை ஈர்ப்பதாக அது அமையின் தரவுகள் தயக்கமின்றி நிரப்பப்பட்டனவாகக் கிட்டும். மாறாக, நெருக்கமான முறையில், அமைந்து, நடுநிலையின்றி இருக்குமாறு வினாநிரல் அல்லது பட்டியல் உருவாக்கப்பட்டால், அது தவறானதாகிவிடும். இதனால் தகவலாளி பதில் தருவதற்குச் சிரமப்பட்டு, தவறுகள் நிகழ்தல் இயல்பாகி ஆய்வே பிழைபட்டுவிடும்.

8.6.5. இறுதியில், வினாநிரல், பட்டியல் ஆகியவற்றின் மதிப்பைச் சோதித்தறிய வேண்டும். மாதிரிக்காகச் சிலரிடம் கொடுத்து விடுபட்டவை, தவறானவை எவையும் உள்ளனவா, மாற்றம் தேவையா என்பனவற்றை அறியவேண்டும். எவ்வளவு தான் கவனமாகச் செயல்படுபவராக ஆய்வாளர் இருப்பினும், சில விடுபட்டுப் போயிருக்கலாம். செயல்படுத்திக்காண்கையில் தான் அத்தவறுகள் புலப்படக்கூடும். ஆதலால், சோதித்தறிந்து செம்மை செய்த பிறகே, வினாநிரல், பட்டியல் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும். சோதனை அளவில் உருவாக்கி, இடர் களைந்து, சரியாக வடிவமைத்து, பின்னர் தகவலாளிகளுக்கு அஞ்சலில் அனுப்பவோ, நேரில் எடுத்துச் செல்லவோ வேண்டும்.

**8.6.6. அமைப்பு**

8.6.6.1.1. வினாநிரல் - பட்டியல் ஆகியவற்றின் அமைப்பு தகவலாளியைக் கவர்வதாக இருத்தல் வேண்டும். வடிவச் செம்மை உள்பட அனைத்து நிலைகளிலும் தகவலாளியின் கவனத்தை ஈர்க்குமாறு அவை உருவாக்கப்பட வேண்டும். நெடுங்காலத்திற்குப் பாதுகாத்து வைக்கக்கூடியதாக - ஆவணம்

Scanned by TapScanner

போன்றதாக - விளங்கும் வண்ணம் வினாநிரல், பட்டியல் நல்ல தரமிக்க, மென்மையான தாளில் உருவாக்கப்பட வேண்டும். வினாநிரலின்/பட்டியலின் வடிவம் கைக்கு அடக்கமாக இருத்தல் வேண்டும். மிக நீண்டதாக, வடிவமற்றதாக அமையின், தகவலாளியைக் கவர்வதில் அவை தவறிவிடும். இடம்பெறும் வினாக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, இடம்பெறும் பட்டியல்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவற்றின் நீள, அகல அளவுகள் அமையும். ஆய்வாளர் பயன்படுத்தும் வினாநிரல் - பட்டியல் முழுமைக்கும் ஒரே அளவை வைத்துக்கொள்ள வேண்டும். வினாக்களை உருவாக்கியபின் தாளின் இடதுகை ஓரத்திலும் மேற்புறத்திலும் இடம்விட்டும் ஒரு வரிக்கும் அடுத்த வரிக்கும் இடையில் இடம்விட்டும் அமைக்கவேண்டும். வினாவிற்குக் கீழேயே அவற்றிற்குரிய விடைகளைத் தகவலாளியே கொடுக்கவேண்டும் என்று ஆய்வாளர் எதிர்பார்த்தால் விடைகளின் நீளத்திற்கு ஏற்பப் பொருத்தமாக இடம்விடுதல் வேண்டும். சில வினாக்களுக்கு விடை சிறியதாக இருக்கும்; சிலவற்றிற்கு விடை நீண்டதாக இருக்கும். ஆய்வாளர் எதிர்பார்ப்பதற்கு மாறாகத் தகவலாளி தரும் விடைகள் நீண்டதாகவோ குறுகியதாகவோ இருக்கலாம். ஆய்வாளர் அனுப்பும் வினாநிரலில் அமைக்கப்பட்டுள்ள விடைதருமிடம் கூடியும் குறைந்தும் இருக்கலாம். இச்சிக்கலைத் தவிர்க்க வினாக்களை மட்டும் ஒரேயடியாக அடுத்தடுத்து வரிசை எண் இட்டு அமைத்து, வினாநிரலை ஆய்வாளர் உருவாக்கி அனுப்பி வைத்திடலாம். தகவலாளி, வினாக்களின் வரிசை எண்ணைக் குறித்து அதற்குரிய விடையினைத் தந்துவிடலாம். இம்முறை நடைமுறைக்கு மிகவும் ஏற்றது.[3] பட்டியலில் சரியான விடைகளைக் குறியிட்டுக் காட்டுவது, விடை எண்ணைக் குறிப்பது, உண்டு/இல்லை என்று குறிப்பது போன்ற முறைகளே பெரிதும் பயன்படுத்தப்படுவதால், அங்கு இச்சிக்கல் எழுவதில்லை.

8.6.6.12 வினாநிரலில்-பட்டியலில் இடம்பெறும் வினாக்களை அச்சிட்டால், துணைத்தலைப்புக்கள், வினாக்கள், வினாவரிசை எண்கள், துணைப்பகுப்பு எண்கள் போன்றவற்றைத் தனித்தன்மையான எழுத்துக்களில் அச்சிடலாம். தட்டச்சு, மையொற்று முதலிய முறைகளைப் பயன்படுத்தினால், எழுத்துக்கள் தெளிவாக விளக்குமாறு தட்டச்சு செய்யவேண்டும்.

Scanned by TapScanner

### 8.6.6.2 உள்ளடக்கம்

வினாநிரலின் - பட்டியலின் உள்ளடக்கம் பின்வரும் மூன்று பகுதிகளைக் கொண்டது. அவையாவன :

1. அறிமுகப்பகுதி
2. வினாநிரல்/பட்டியல் - மையப்பகுதி
3. தகவலாளிக்கு ஆய்வாளர் தரும் குறிப்புக்கள்

*1. அறிமுகப்பகுதி* என்பது பெரும்பாலும் அனைத்து வினாநிரல்களுக்கும் பட்டியல்களுக்கும் ஒன்றுபோல அமையும். வினாவின் நோக்கம், வினாநிரல்/பட்டியல் பற்றிய தகவல்கள், தரப்பட வேண்டிய பதில் என்பனபற்றிய செய்திகளை இப்பகுதியில் காணலாம். ஆய்வுத் தலைப்பு, ஆய்வாளரைப் பற்றிய குறிப்புகள், வினாநிரல்/பட்டியல் வரிசை எண், தகவலாளி பற்றிய விவரம் (தகவலாளியின் பெயர், முகவரி, வயது, பால், கல்வித் தகுதி, வகிக்கும் பொறுப்பு போன்றவை), இடம், காலம் ஆகியன இப்பகுதியில் இடம்பெறும். தகவலாளி பற்றிய விவரம் என்பது ஆய்வின் தன்மைக்கு ஏற்ப மாறுபடும். சான்றாகப் பின்னிணைப்பு 1, 2 ஆக இந்நூலில் இடம் பெற்றுள்ள (மாதிரிக்காக இணைக்கப் பெற்றுள்ள) வினாநிரல், பட்டியல் ஆகியவற்றைக் கூறலாம். பின்னிணைப்பு 1-இல் நிஜ நாடக இயக்கம்பற்றிய வினாநிரலில் இடம்பெற்றுள்ள வினாக்கள் 1-7 (1,,2,3,4,5,6&7 என்பன தகவலாளி பற்றியவை.[4] பின்னிணைப்பு 2-இல் இடம்பெற்றுள்ள பட்டியலில் வினா எண் VII-இல் தகவலாளியின் பெயர், முகவரி, வயது, சமயம், சாதி, தொழில், கோயிலுடன் உள்ள தொடர்பு ஆகிய வினாக்கள் உள்ளன.[5] இப்பட்டியல் அறுபத்துமூவர் (நாயன்மார்) கதை வேறுபாடுகள் பற்றிய ஆய்விற்காக உருவாக்கப்பட்டது. பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள நாயன்மார்பற்றிய செய்தி களுடன் கூட, மக்களின் வழக்கிலுள்ள செய்திகள், கோயில் களில் அமைந்துள்ள அறுபத்துமூவர் சிலை, சிற்பம், ஓவியம் போன்ற செய்திகள் ஆகியவற்றை ஒப்பிட்டுப் பகுப்பாய்வு செய்வது இந்த ஆய்வாளரின் நோக்கம். எனவே, இப்பண்பிற்கு ஏற்பப் பட்டியலில் தகவலாளியின் சமயம், சாதி, கோயிலுடன் உள்ள தொடர்பு ஆகிய விவரங்களையும் ஆய்வாளர் கேட்டுள்ளார். இந்த அறிமுகப்பகுதி வினாநிரல்/பட்டியல் இவற்றின் முதலில்தான் அமையவேண்டும் என்ற வரையறை

Scanned by TapScanner

ஏதும் இல்லை. ஆய்வின் நோக்கம், ஆய்வுப் பொருள் விளக்கம் போன்றவற்றைத் தனியே விளக்கி (ஆய்வாளரின் மேலுறை மடல் இணைக்கப்பட்டு), தகவலாளி பற்றிய விவரங்கள், கேட்கும் வினாக்கள், வினாநிரலின்/பட்டியலின் இறுதியில் இடம் பெறலாம்.[6] அல்லது, வினாநிரலின்/ பட்டியலின் தொடக்கமாக அமையும் வினாக்களிலே தகவலாளி பற்றிய வினாக்கள் இடம்பெறலாம்.[7]

2. **வினாநிரல்/பட்டியல் மையப்பகுதி.** வினாநிரல், பட்டியல் ஆகியவற்றின் உயிர்நாடி இதுதான். தகவலாளியிடமிருந்து ஆய்வாளர் திரட்டவிரும்பும் தரவுகளை அறிவதற்குரிய வினாக்கள் இடம்பெறும் பகுதி இது. எனவே, மிக்க கவனத்துடன் ஆய்வாளர் இதை உருவாக்க வேண்டும்.

3. **தகவலாளிக்கு ஆய்வாளர் தரும் குறிப்புக்கள்.** வினாநிரலை/பட்டியலை எவ்வாறு நிரப்புவது, வினாக்களை எந்த முறையில் அணுகி விடைதருவது, குறியீடு இட வேண்டுமா, விளக்கமான விடை தரவேண்டுமா, எந்த முகவரிக்கு வினாநிரலை அனுப்புவது என்பன போன்ற பல செய்திகள் இதில் இடம்பெற்றிருக்கும்.[8] வினாநிரல் அஞ்சலில் அனுப்பப்படுவதால், தகவலாளிக்குத் தேவையான அனைத்துச் செய்திகளையும் விரிவாகவும் விளக்கமாகவும் இப்பகுதியில் அமைத்தல் வேண்டும். ஆய்வாளர், தகவலாளியை விளித்துப் பேசுவதாக அமைக்கும் இடங்களில் எல்லாம், விரும்பி வேண்டிக் கேட்கும் பாங்கில் நயமான, மரியாதைப் பன்மைச் சொற்களை ஆளவேண்டும்.

### 8.6.6.3 வினாக்களின் வகைகள்

8.6.6.3.1 வினாநிரல் அல்லது பட்டியலில் இடம்பெறும் வினாக்கள் பல்வேறு வகையின. முற்கூறிய பரந்துபட்ட வடிவமுடைய வினாக்கள், வரையறுத்த வடிவமுடைய வினாக்கள், படவடிவ வினாக்கள் ஆகியன தவிர, இருவிடைகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் வினாக்கள், பலவிடைகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் வினா, விடைகளை வரிசைப்படுத்தும் வினா போல் உள்ளன.

8.6.6.3.2 வினா ஒன்றைக் கொடுத்து அதற்குரிய இருவிடைகளையும் தந்து (உண்டு/இல்லை என்பது போல) அவற்றில்

Scanned by TapScanner

ஒன்றைக் குறிக்கச் சொல்லுமாறு அமைப்பது இரு விடைகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் வினா ஆகும். இவ்வகையில், ஒரு விடை உடன்பாடாகவும் மற்றது எதிர்மறையாகவும் இருக்கும். சான்றாக, 1. தகவலாளி ஆண்/பெண், 2. தகவலாளி பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர். ஆம்/இல்லை என்பன போல்வன. பின்னிணைப்பு 1,2 ஆகியவற்றில் உள்ள வினாநிரல், பட்டியல் ஆகிய இரண்டிலும் இத்தன்மையிலான வினாக்கள் உள்ளன.

8.6.6.3.3 இரண்டிற்கு மேற்பட்ட பல விடைகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் வினா என்பது மற்றொரு வகை. இவ்வகை வினாக்களை உருவாக்குகையில் மிக்க கவனத்துடன் பொருத்தமான விடை அனைத்தையும் தரவேண்டும். அத்துடன், இறுதியில் விட்டுப்போனவை எவையேனும் இருப்பின் அவற்றைக் குறிக்கப் பிற செய்திகள் என்று குறிப்பிடுதல் வேண்டும். சான்றாக, கோவில் பாடல் பெற்றுள்ளது. (யாரால் என்பதை அடைப்புக் குறியினுள் X எனக் காட்டுக)

அப்பர் [ ]
சம்பந்தர் [ ]
சுந்தரர் [ ]
மாணிக்கவாசகர் [ ]
சேக்கிழார் [ ]
பிறர் [ ]

என்று வரும் வினாவைக் கூறலாம்.[9] இவ்வாறு கூறாமல், விடுபட்டுப் போனால், தகவலாளி விடை தருவதை அது பாதிக்கும்.

8.6.6.3.4 விடைகள் பலவற்றைத் தந்து வரிசைப்படுத்தும் வகையில் வினாவை அமைப்பது மற்றொரு வகை. இது முற்கூறிய இரண்டிற்கு மேற்பட்ட, பலவிடைகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் வினா வகையைப் போன்றதுதான். ஆயினும் முன்னதில் சரியான விடை ஒன்றுதான் இருக்க, தகவலாளி அதைத் தேர்வு செய்யவேண்டும். வரிசைப்படுத்தும் வகையில், பல விடைகளையும் வரிசைப்படுத்த வேண்டும். சான்றாக, குமுதம் இதழில் தங்களைக் கவர்ந்த பகுதி எது என்பதைக் கீழ்க்கண்ட விடைகளுள் வரிசைப்படுத்தலாம்.

சிறுகதை [ ]

தொடர்கதை [ ]

தலையங்கம் [ ]

அரசு கேள்வி பதில் [ ]

திரைப்பட விமர்சனம் [ ]

துணுக்கு [ ]

கேலிச்சித்திரம் (கார்ட்டூன்) [ ]

என்பதைக் கூறலாம்.

### 8.6.6.4 வினாநிரலில்/பட்டியலில் இடம்பெறக்கூடிய வினாக்களின் இயல்புகள்

ஆய்வின் தன்மைக்கும் நோக்கத்திற்கும் ஏற்ப வினாக்களை அமைக்க வேண்டும். வினாக்கள் தேர்ந்து எடுத்தனவாக, சிலவாக, தெளிவான சொற்களில் அமைந்தனவாக இருக்கவேண்டும். அவை எளிமையாகவும், எளிதாக விடையளிக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். தகவலாளியின் அறிவின் எல்லைக்கு ஏற்றவாறு வினாக்கள் இருத்தல் வேண்டும். ஆய்விற்குப் பயன்படாமல், அட்டவணைப்படுத்த இயலாமல் போகக்கூடிய வினாக்களை உருவாக்குதல் கூடாது. வினாக்கள் நேரடியாக விடை தருமாறு அமைய வேண்டும். ஒன்று மற்றொன்றுடன் தொடர்புடையதாக அவை இருத்தல் வேண்டும். வினாநிரலில்/பட்டியலில் இடம்பெறும் வினாக்களில் கலைச்சொற்களைப் பயன்படுத்தினால் அவற்றில் ஒருநீர்மை (consistency) இருத்தல் வேண்டும். முதன்முதலாக ஒரு கலைச்சொல்லை ஆளுகையில் அதற்கிணையான ஆங்கிலச் சொல்லை அடைப்பினுள் தருதல் வேண்டும். தகவலாளி குறைவாக எழுதும்வண்ணம் வினாக்கள் இருத்தல் வேண்டும். தகவலாளிக்கு ஐயத்திற்கிடமில்லாதவாறு வினாக்கள் தெளிவாக உருவாக்கப்படல் வேண்டும். தெளிவும் எளிமையும் கருத்துப் பரிமாற்றமும் உண்மை நாடும் நாட்டமுமே வினாநிரலின்/பட்டியலின் நோக்கம் ஆகும். எனவே, வினாக்களில் அவை விளங்குமாறு ஆய்வாளர் ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும்.

Scanned by TapScanner

### 8.6.65 தவிர்க்கப்படவேண்டிய வினாக்கள்

வினாநிரலில்/பட்டியலில் மிக நீண்ட வினாக்கள் இடம் பெறுதல் கூடாா. அவை புரிந்துகொள்ளவும் எளிதில் விடை யிறுக்கவும் துணைபுரியா. நீண்ட வினாக்களைச் சிறுசிறு வினாக்களாகப் பகுத்துத் தருதல் வேண்டும். இதுபோல, கலவைத்தன்மையிலான கடின வினா எதுவும் வினாநிரலில்/ பட்டியலில் இடம்பெறுதல் கூடாது. தகவலாளியின் தனிப்பட்ட வாழ்க்கை, ஆளுமை பற்றிய வினாக்களை இயன்ற அளவு தவிர்த்தல் நல்லது. ஆய்வின் மையப்பொருளாக அமைகின்ற போதில் மட்டும் தனிப்பட்ட வாழ்க்கைபற்றியவற்றைக் கேட்கலாம். தகவலாளியின் வருமானம், நடத்தை போன்றவை பற்றிய வினாக்களை ஆய்வாளர் கேட்கக் கூடாது. அவ்வாறு கேட்டால், ஆய்வாளரையே தகவலாளி ஐயுறுவர். அத்துடன் இத்தகு வினாக்கள் வினாநிரலின்/பட்டியலின் தொடக்கத்தில் இடம்பெறின், தகவலாளி, வினாநிரலை/பட்டியலை நிரப்பவே தயங்கக்கூடும். எனவே, அவற்றைத் தவிர்க்கவேண்டும். தகவலாளி பதில் அளிக்கத் தயங்கும் வினாக்கள், ஆய்விற்குத் தொடர்பில்லாத வினாக்கள், சரியான விடை கிட்டாத வினாக்கள், பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூக மதிப்புக்கள், ஒழுக்க வரையறை போன்றவை தொடர்பான வினாக்கள் ஆகியவற்றையும் ஆய்வாளர் தவிர்க்க வேண்டும்.

### 8.6.6.6 மொழிநடை

வினாநிரலில்/பட்டியலில் வினாக்களை அமைப்பதில் அவற்றிற்கேற்பச் சொற்களை ஆள்வதில் ஆய்வாளர் ஆழ்ந்த கவனம் செலுத்தவேண்டும். சொற்கள் எளிமையானதாக, தெளிவானதாக, இருபொருள் தராததாக இருக்கவேண்டும். இயன்றவரை, கலைச்சொற்களை ஆள்வதை ஆய்வாளர் தவிர்க்க வேண்டும். ஒருவேளை, அவற்றை ஆளவேண்டிய தேவை ஏற்படின், தேவையான விளக்கம் தரவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் வினாநிரலில்/பட்டியலில் சுருக்க எழுத்துக்களை ஆண்டு வினாக்களை ஆய்வாளர் அமைக்கக் கூடாது, வினாநிரலில்/பட்டியலில் ஆளும் வினாக்களில் பொதுமொழியை (Standard language) மட்டுமே பயன்படுத்த வேண்டும். கிளை மொழி, வட்டார வழக்குச் சொற்கள், பிறமொழிச் சொற்கள், குழூஉக்குறிச் சொற்கள் போன்றவற்றை எக்காரணத்தைக் கொண்டும் ஆளக்கூடாது. ஆளவேண்டிய தேவை ஏற்படின்,

Scanned by TapScanner

அடைப்பினுள் விளக்கம் தந்து அவற்றைத் தரவேண்டும். பொதுவான சொற்களிலும் கலைத்துறைச் சொற்களிலும் ஆளக்கூடிய சொற்கள் ஒரே பொருளுடையனவாக இருத்தல் வேண்டும். தகவலாளி புரிந்துகொள்ளுவதற்கியலாத கடின சொற்களையோ, இருபொருள்/பலபொருள் தரும் சொற்களையோ வினாநிரலில்/பட்டியலில் ஆளுதல் கூடாது. தகவலாளிகள் அனைவருக்கும் புரியக்கூடிய மொழியை ஆளுவதில் மட்டுமே ஆய்வாளர் கவனம் செலுத்த வேண்டும். வினாநிரலில்/பட்டியலில் இடம்பெறும் வினாக்களை உருவாக்குகையில் ஆய்வாளர் தம் அறிவு நுட்பத்தையோ கல்வித் திறனையோ வெளியிட முனையக்கூடாது.

### 8.6.6.7 வினாக்களை வரிசைப்படுத்தி அமைத்தல்

8.6.6.7.1 வினாநிரலில்/பட்டியலில் வினாக்களை வரிசையாக அமைப்பதிலும் ஆய்வாளர் கவனம் செலுத்த வேண்டும். எளிதான, கருத்து முரண்பாடற்ற வினாக்கள் முதலில் இடம் பெற வேண்டும். எளிமையிலிருந்து தொடங்க வேண்டும் என்பது பொதுவான விதி. தொடக்கத்திலேயே கடினமான வினாக்களை அமைத்து வினாநிரலை/பட்டியலை உருவாக்கினால் தகவலாளி விடைதர மறுக்கக் கூடும். தகவலாளி பதில் தருவதற்கு விழையுமாறு, அவருடைய ஆர்வத்தைத் தூண்டும் வினாக்கள் முதலில் இடம்பெற வேண்டும். இதன் விளைவாகப் பின்னர் வரும் வினாக்களில் கடினம் இருப்பினும் தகவலாளி முயன்று தகவல் தரக்கூடும். இதனால் ஆய்வு வெற்றி பெறும். தகவலாளியின் கருத்து, அறிவுரை போன்றவற்றைக் கேட்கும் வினாக்களை வினாநிரலின்/பட்டியலின் தொடக்கத்தில் அமைக்க வேண்டும். இதனால் தகவலாளி மகிழ்ந்து, பின்னர் வரும் வினாக்களுக்கு விடை தருவதில் ஆர்வங்காட்டி, ஆய்வாளருக்கு முழு ஒத்துழைப்பையும் நல்கக்கூடும். ஒரு பொருள் தொடர்பான வினாக்களை ஒன்றாக வரிசைப்படுத்த வேண்டும். வரிசைப்படுத்துவதில் பொருளை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். இவ்வாறு வரிசைப்படுத்தி, பல உட்பிரிவு களுடன் அமைத்தாலும் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று இயைபு படப் பொருந்தி முழுமையாக விளங்குமாறு வினாநிரல்/ பட்டியல் உருவாக்கப்பட வேண்டும். ஒன்றிற்கொன்று சங்கிலித் தொடர்பு இருக்குமாறு வினாக்கள் வரிசைப்படுத்தப்பட வேண்டுமே அல்லாது, ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்து, தனித்தனியே

நிற்குமாறு இருத்தல் கூடாது. ஒரு உள்தலைப்பிலிருந்து மற்றோர் உள்தலைப்பிற்கு மாறுவது மென்மையாக இசைந்து செல்ல வேண்டும். திடீரென்று திசை மாறிவிட்டது போன்ற உணர்வைத் தகவலாளிக்கு அவை உருவாக்கக் கூடாது. இவ்வாறு, வினாநிரலில்/பட்டியலில் வினாக்களை வரிசைப் படுத்துவதில் ஆய்வாளர் ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும்.

8.6.6.7.2 ஆய்வாளரின் மடலுடன் (மேலுறை மடல்) வினாநிரல் தகவலாளிக்கு அனுப்பப்பட வேண்டும். அதில் ஆய்வின் நோக்கம், தகவலாளி தகவல் தரவேண்டியதன் இன்றியமையாமை போன்றவற்றை விளக்கி, தகவலாளி வினாநிரலை விரைந்து அனுப்பிவைக்க வேண்டும் என்று ஆய்வாளர் வேண்டியிருப்பார். நிறைவு செய்த வினாநிரலைத் தகவலாளி அனுப்பி வைக்கவேண்டிய ஆய்வாளரின் முகவரி சுட்டப்பட்டு இருக்கும். தகவலாளி தரும் தகவல்கள் நம்பிக்கைக்கு உரியதாக, ரகசியமாகப் பாதுகாக்கப்படும் என்றும், ஆய்வேட்டின் முதற்பகுதியில் நன்றியுரையில் தகவலாளியின் ஒத்துழைப்பு நன்றியறிதலோடு போற்றப்படும் என்றும் ஆய்வாளர் உறுதி கூறியிருப்பார். ஆய்வாளரின் மேலுறைமடல் தனியாகவும் அனுப்பப்படும் (வினாநிரலுடன் இணைத்தும் அனுப்பப்படும்). அல்லது வினாநிரலின் முதல் பக்கத்திலே அம்மடல் அச்சடிக்கப்பட்டிருக்கும்.

8.6.6.7.3 பல தகவலாளிகள் வினாநிரலை நிரப்பித் தாமே வைத்துக்கொண்டுவிடுகின்றனர். அதனை ஆய்வாளருக்கு அனுப்பிவைக்க வேண்டியது தம் கடமை என்று மறந்து விடுகின்றனர்.[10] அவர்களுக்கு நினைவூட்டல் மடல்களை ஆய்வாளர் அனுப்பிவைக்கவேண்டும். ஆய்வாளருக்கு இதுவே ஒரு தொடர்பணியாகிவிடுகிறது. எனவே, தகவலாளிகள் இவற்றின் (வினாநிரல்களின்) இன்றியமையாமையை உணர்ந்து உடனுக்குடன் நிறைவுசெய்து தகவல்தந்து ஆய்வாளருக்கு அனுப்பி வைத்துவிட வேண்டும். ஆய்வாளர் தகவலாளிக்கு வினாநிரலை அனுப்பும்பொழுதே, நிறைவுசெய்த வினாநிரலைத் திருப்பி அனுப்புவதற்குரிய போதுமான அஞ்சல்தலை ஒட்டப்பட்ட, தம் (ஆய்வாளர்) முகவரியிட்ட உறையை வைத்து அனுப்ப வேண்டும். இது, ஆய்வாளரின் கடமையாகும்.

8.6.6.7.4 பட்டியலில் இத்தகு இடர்ப்பாடு எதுவும் ஏற்படுவ தில்லை. ஆய்வாளர் நேரே கள ஆய்வில் சென்று தகவலாளி

களிடம் கொடுத்து, அங்கிருந்து விடையளிக்கப் பெற்ற பட்டியல்களைப் பெற்று வருகிறார். இலக்கிய ஆய்வுகளுக்கு இவற்றைப் பயன்படுத்தி மிக்க பயனைப் பெறலாம். ஆய்வாளரின் பணிக்கு ஒத்துழைப்பு நல்குவது தம் கடமை என்று தகவலாளி எண்ணவேண்டும். தகவலாளி செய்யும் உதவி சிறிதேயானாலும் ஆய்வேட்டில் உரிய இடத்தில் அதனை நன்றியறிதலுடன் போற்றுவது ஆய்வாளருக்குரிய கடமையாகும்.

### 8.7.1 இம்முறைகளில் உள்ள இடர்ப்பாடுகள்

வினாநிரலின்வழி பெரிதும் நம்பகமான தகவல்களைப் பெறுதல் இயலாது. பட்டியல் முறையில் ஆய்வாளருக்கும் தகவலாளிக்கும் இருக்கும் நேரடியான தொடர்பு வினாநிரல் முறையில் இல்லை. பட்டியலில் சூழ்நிலையை உற்றுநோக்கி அதற்கு ஏற்ப வினாக்களையும் குறுக்கு வினாக்களையும் கேட்டுத் தெளிவு பெறலாம். அத்தகு வழி வினாநிரலில் இல்லை. வினா நிரலில் ஏதும் ஐயம் ஏற்படின் அவைகளை நீக்க ஆய்வாளர் அருகில் இல்லாததால், தகவலாளி இடர்ப்படக்கூடும். பெரும்பாலான தகவலாளிகள் வினாநிரலை நிரப்புவதில் சரியான அக்கறை காட்டுவதில்லை. சிலர் முழுமையாக நிரப்பாமலும், சிலர் சிலவற்றை விடுத்தும் வினாநிரலை அனுப்பிவைப்பர். இன்னும் சிலர் வினாநிரல்களுக்கு அக்கறை காட்டுவதேயில்லை. சிலர் வினாநிரல்களை ஆய்வாளருக்குத் திருப்பி அனுப்புவதில்லை. பெரும்பாலான விடையளிக்கப் பட்டுத் திரும்பப்பெற்ற வினாநிரல்களில் உள்ள தகவலாளிகளின் கையெழுத்தை ஆய்வாளர் புரிந்துகொள்ள இயலாதவாறு எழுத்து மோசமாக இருக்கும். சிலர் பென்சிலால் எழுத, சிலர் ஒன்றின்மேல் ஒன்றை எழுத, சிலர் விடைகளுக்குப் பதில், எதிர் வினா எழுப்புவர். (சான்றாக, தாங்கள் எந்த வேலைக்குப் போக விரும்புகின்றீர்கள் என்ற வினாவிற்கு, நீங்கள் வேலை வாங்கித் தருவீர்களா? என்று எதிர் வினா விடையாக வந்தது). சிலர் குறும்பாக விடைதர என்று பலவாறு இடர்ப்பட வினாநிரலில் வாய்ப்புகளுண்டு.

8.7.2 வினாநிரலுடன் ஒப்பிடுகையில், பட்டியல் முறை மிகவும் கடும் உழைப்பும் பொருட் செலவும் மிக்க ஒன்று. களத்திற்சென்று, தகவலாளிகளிடம் நேரடித் தொடர்புகொள்ள வேண்டியிருப்பதால் ஆய்வாளர் தாமே நேரடியாகச் செல்லினும் பலரை இப்பணியில் ஈடுபடுத்தினாலும் உழைப்பும், பொருட்

Scanned by TapScanner

செலவும், காலமும் மிகுதியாகும். ஆய்வாளர் அருகிலே யிருப்பதால் தகவலாளி அவர் ஆளுமையால் பாதிக்கப்படக் கூடும். சரியான ஒரு விடையை நினைப்பினும்கூட, ஆய்வாளர் தம்மை மதிக்கவேண்டும் என்பதற்காக, நடுவுநிலையின்றி, விருப்பு வெறுப்புகளுக்கு ஆட்பட்டு விடையளிக்கக்கூடும். ஆய்வாளர், தரவுகளைத் திரட்டுவதில் காட்டும் ஆர்வமும் சுறுசுறுப்பும் தகவலாளியைப் பாதிக்கும். இத்தகு இடர்ப்பாடுகள் பட்டியல் முறையில் உள்ளன.

8.8 வினாநிரலும் பட்டியலும் ஆய்வில் சரியான முறையில் பயன்படுத்தப்பட்டால் நல்ல விளைவுகளை நல்கும். இலக்கிய ஆய்வில் அண்மைக்காலங்களில் இவ்விரு முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

Scanned by TapScanner

# 9

# பேட்டி

## (INTERVIEW)

9.1.1 ஆய்வாளர், தகவலாளியை நேரே கண்டு உரையாடுவது பேட்டி ஆகும். நேரடியாகத் தகவல் தருபவர்களை மட்டுமன்றி, ஆய்வுப்பொருளிற்குத் தொடர்பான பலரையும் கண்டு உரையாடித் தரவுகளைப் பெறுவதும் பேட்டியுள் அடக்கம். பேட்டி என்பதில் ஆய்வாளர் வினாக்களைத் தொடுக்க, தகவலாளி விடைகளைத் தருவது மட்டும் அடங்குவதில்லை. ஆய்வாளரும் தகவலாளியும் முகத்திற்கு முகம் கலந்துரையாடிப் பல செய்திகளை அதன் வாயிலாக ஆய்வாளர் திரட்டுவது பேட்டி எனப்படும். அது ஓர் உயிர்த்துடிப்புமிக்க கலை. "பேட்டி என்பது ஆய்வாளருக்கும் தகவலாளிக்குமிடையே நிகழும் இருவழி உரையாடல் மட்டுமன்று. முத்திரைகள், பாவங்கள், சிறுகுறிப்புகள், உடல் அசைவுகள், உணர்வு வெளிப்பாடுகள், உள்ளார்ந்த உணர்வுகளை வெளியிட வழியில்லா மௌனங்கள் போன்ற பலவற்றையும் பேட்டியில் காணலாம்" என்று பாலின் யங் கூறுகிறார்.[1] "பேட்டி என்பதே முத்திரைகளால் நடைபெறும் கலந்துரையாடல்" என்பர்.[2] சொற்களால் வெளியிடுவது ஒரு பகுதியைத்தான். எஞ்சியவை இவ்வாறு பலவழிகளில் வெளியிடப்பெறும். எனவே, ஆய்வாளர் ஒருவரைப் பேட்டி காணச்செல்கையில் உரையாடிப் பெறுவதையும், பேசாத பேச்சாக, குறியீடுகளால் புலப்படுத்தப் படுவதையும் ஒருசேர அறியவும் உணரவும் வேண்டும். ஒவ்வொரு பேட்டியிலும் உணர்த்தப்பட்டதுபோகத் தகவலாளியிடம் எஞ்சியவை உண்டு.

9.1.2 பொதுவாக மக்கள் எவ்வாறு உணர்கின்றனர், எவ்வாறு அனுபவிக்கின்றனர், எவற்றை நினைத்துப் பார்க்கின்றனர்,

Scanned by TapScanner

அவர்களுடைய நோக்கம் என்ன, அவர்கள் செயல்படுவதற்குரிய காரணம் என்ன என்பன போன்ற பற்பல வினாக்களுக்குரிய விடைகளை அறியும் ஒரே வழி அவர்களிடம் உரையாடுவது தான் - பேட்டி காண்பதுதான் என்று கூறுவர்.[3] பேட்டி காணச் செல்லும் ஆய்வாளர், தகவலாளியிடம் (பேட்டி அளிப்பவரிடம்) முதன்முதலில் பொதுவான சில வினாக்களைக் கேட்டுப் பேட்டியைத் தொடங்குகிறார். தகவலாளி பல செய்திகளை அடுத்தடுத்துக் கூறுகிறார். தம் ஆய்வு நோக்கத்திற்கு ஏற்ப, வரையறுத்துக்கொண்டு, அங்கங்கு திசைதிரும்பாமல் நெறிப் படுத்தித் தகவலாளியிடம் இருந்து மிகுதியான தரவுகளை ஆய்வாளர் பெறுகிறார். சிலசமயங்களில் பேட்டி காண்பவரிடம் (ஆய்வாளர்) பேட்டியளிப்பவர் (தகவலாளி) வினாக்களை எழுப்புவதும் உண்டு. பேட்டியில் ஆய்வாளரே வினவுபவராக எப்போதும் இருக்க முடியாது. எனவேதான், கலந்துரையாடல் என்றும் இதனைக் கூறுவர். பெரும்பாலும், ஆய்வாளர் தம் ஆய்வின் நோக்கிற்கு ஏற்ப வினவுவதால், அவர் மிகுதியும் வினாக்களைக் கேட்பார்; தகவலாளி விடை அளிப்பார். இது பேட்டி நிகழும் முறை. மனித மன உணர்வுகள், மனிதனின் செயல்கள் ஆகியவற்றை அறிய இம்முறையைப் (பேட்டியைப்) பெரும்பாலும் ஆய்வுகளில் பயன்படுத்துவர். சமுதாயவியல், உளவியல் ஆய்வுகளில் அண்மைக்காலத்தில் இம்முறை மிகவும் பயன்படுத்தப்படுகிறது. இலக்கிய ஆய்வுகளிலும் இம்முறை இன்றியமையாத ஒன்று என்று உணரத்தலைப்பட்டனர். எனவே, அண்மைக்காலமாக, இலக்கிய ஆய்வாளர்களும் பேட்டியைத் தம் ஆய்வுகளில் பயன்படுத்தி வருகின்றனர்.

9.1.3 தேர்ந்தெடுத்த, குறிப்பிட்ட பொருளைப்பற்றியதாகப் பேட்டி அமைகிறது. இதனால், புறம்பான தரவுகள் எதுவுமின்றி, வரையறுத்த எல்லைக்குட்பட்டதாக அது அமையும். பேட்டியின் அடிப்படை நோக்கமே, தகவலாளியிடம் இருந்து மிகுதியான தரவுகளையும் அவருடைய தனிப்பட்ட அனுபவங்களையும் திரட்டுவது ஆகும். பேட்டியின் வழியே மிகுதியான செய்திகளை அறியலாம். பேட்டி காணும் ஆய்வாளரும் தம் எண்ணங்களைப் பேட்டியின் இடையிடையே கூறுவதால், பேட்டியில் முழுமையாகக் கருத்துப் பரிமாற்றம் நிகழும். பேட்டி என்பது வெறும் வினா விடை நிகழ்ச்சி அன்று. ஆய்வாளருக்குப் புதிய சிந்தனைச் சிதறல்களை ஏற்படுத்துமாறு

Scanned by TapScanner

தகவலாளியின் ஒவ்வொரு சொல்லும் செயலும் அமையும். ஆய்வாளர் எழுப்பிய வினாவிற்குப் பேட்டி தருபவர் தரும் விடை என்பது வெறும் பதிலுரையாக மட்டும் அமைவதில்லை. (ஆய்வுத்) தொடர்பான பல்வேறு தகவல்களை அறியத் தூண்டும் வண்ணம் அது அமையும்.

9.1.4 தகவலாளிக்கு மட்டும் தெரிந்து, அவரிடம் தவிர வேறு எங்கும் பெற முடியாத தரவுகள் பலவற்றை அறிவது பேட்டியின் தலையாய நோக்கம். தகவலாளி, குறிப்பிட்ட அப்பொருள்பற்றித் தமக்குத் தெரிந்த தகவல்கள், தம் வாழ்க்கையில் நடைபெற்ற அது தொடர்பான நிகழ்ச்சிகள், உணர்வுகள், அது தொடர்பான எதிர்ச்செயல்கள் போன்ற பலவற்றையும் எடுத்துரைப்பர். ஆய்வாளர் இவை அனைத்தையும் ஒன்றுவிடாமல் முழுமையாகக் கவனித்துக் கேட்பார். தம் ஆய்வின் நோக்கம், கருதுகோள் ஆகியவற்றிற்கு ஏற்ப வினாக்களை இடையிடையே எழுப்பி, அவை தொடர்பான தம் எண்ணங்களைக் கூறி, ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெற்றுப் பேட்டியைச் சுவைபடவும் பயனுடையதாகவும் ஆக்கிக் கொள்வார். தம்முடைய ஆய்வுப்பொருளிற்கு ஏற்றவாறு தகவலாளியிடம் வினாக்களைத் தொடுத்து, கவனம் சிதறாமல், குறிப்பிட்ட சூழல்களில் நிகழும் சொற்கள் பற்றிய ஆய்வுக்கூட ஆய்வாகப் பேட்டி அமையும். இவ்வாறு அமையும் பேட்டிகளில் பேட்டி காணும் ஆய்வாளர், உளவியலார் போலச் செயல் படுகிறார். தகவலாளியின் செயல், எதிர்ச்செயல், எண்ண மாற்றம், அங்க அசைவு போன்ற அனைத்தையும் நுணுக்கமாக உற்றுநோக்குவது ஆய்வாளரின் பணியாகிறது.

## 9.2.0 பேட்டியின். வகைகள்

பேட்டியைப் பலவகையாகப் பகுப்பர் ஆய்வியலார். அவற்றை இங்குக் காண்போம்.

### 9.2.1 கட்டமைப்புடைய பேட்டி (Structured Interview)

ஆய்வாளர் தகவலாளிவிடம் கேட்க வேண்டிய தரவுகள் பற்றி முன்கூட்டியே சிந்தித்து, தெளிவாக, வரையறுத்த வினாக்களை உருவாக்கிக்கொண்டு பேட்டியை நிகழ்த்தினால் அது கட்டமைப்புடைய பேட்டி ஆகும். திட்டமிட்டு உருவாக்கிப் பட்டியல் ஒன்றைத் தகவலாளியிடம் கொடுத்து விடைகளை நிறைவுசெய்து தருமாறு கேட்பதைப் போன்றது இது.

ஆய்வாளர் தம் நிலையிலிருந்து வேறு வினாக்களையோ செய்திகளையோ கேட்கமாட்டார். தகவலாளிக்குத் தெளிவு வேண்டிய இடங்களில் மட்டும் வினாக்களை ஆய்வாளர் விளக்கிப் பேசுவார். வினாக்களை ஒவ்வொன்றாகக் கூறிவிட்டுத் தகவலாளி விடை தருகையில் அவற்றை ஒலிப்பதிவு செய்து கொள்வார். எழுத்தாளர், கலைஞர், அரசியல்வாதி போன்ற பலரைப் பேட்டி காண்பதற்குப் பெரும்பாலான இதழ்கள் இம் முறையைப் பயன்படுத்துகின்றன. வினாக்களை முன்கூட்டியே உருவாக்கித் தகவலாளிக்கு (பேட்டி தருபவருக்கு) இதழாசிரியர் அனுப்பிவிடுவார். பேட்டி காணும் நாளன்று, இதழ் சார்பில் அதன் நிருபர் சென்று வினாக்களை ஒவ்வொன்றாகக் கேட்க, பேட்டி தருபவர் விடைகளைக் கூறுவர். பேட்டி காண்பவர் அவற்றை எழுதிக்கொள்வார். பேட்டி தருபவர் பரந்துபட்ட அலுவல்களில் ஈடுபட்டு இருக்கும் ஒருவராக இருப்பதால் அப்பொருள்பற்றி முன்கூட்டியே சிந்தித்து வைப்பதற்கு வாய்ப்பாக அமைய இவ்வாறு முன்பே வினாக்களை அனுப்பி வைக்கின்றனர். ‘தமிழ்ச் சிறுகதைகளில் அலுவல் மகளிர் நிலை’ என்று ஆய்வுத் தலைப்புத் தேர்ந்தெடுத்து ஆய்வாளர் ஒருவர் ஆராய்கிறார் என்று வைத்துக்கொள்வோம். குறிப்பிட்ட காலம் (1970 - 1971) ஒன்றைத் தேர்ந்தெடுத்து அக்காலத்தில் வெளிவந்த இதழ்கள் அனைத்திலும் இடம்பெற்ற ஆய்விற்குரிய பொருள் பற்றிய சிறுகதைகள் அனைத்தையும் ஆராய முற்படுவார். குறிப்பிட்ட அப்பொருள் பற்றிக் கதைகள் எழுதிய எழுத்தாளர் அனைவரையும் ஆய்வாளர் பேட்டி காண்பார். முன்னரே, திட்டமிட்டு வினாக்களை உருவாக்கி, அவற்றின் அடிப்படையில் எழுத்தாளர்களிடம் ஆய்வாளர் பேட்டி காண்கிறார். இந்த ஆய்வாளர் பயன்படுத்தும் பேட்டி, கட்டமைப்புடைய பேட்டி ஆகும். இது, முறைப்படுத்தப்பட்ட பேட்டி (Directive Interview) எனவும் அழைக்கப்படும்.

### 9.2.2.1 கட்டமைப்பில்லாப் பேட்டி (Unstructured Interview)

ஆய்வாளர் முன்கூட்டியே வினாக்களை உருவாக்காமல் தகவலாளியை அணுகி, பேட்டியைத் தொடங்கி, அப்போதைக் கப்போது வினாக்களை வினவுவது கட்டமைப்பில்லாப் பேட்டி ஆகும். பேட்டி தருபவரின் வசதிக்காக இன்னபொருள் பற்றிப் பேட்டி காணத் தாம் வந்துள்ளதாக (தம் ஆய்வுத் தலைப்பு, ஆய்வுப்பொருள், நோக்கம், கருதுகோள்பற்றி விளக்கி)

ஆய்வாளர் கூறிவிட்டுப் பேட்டியைத் தொடங்கிவிடுவார். பெரும்பாலும் இவ்வகைப் பேட்டியில் எவ்விதமான கட்டுப்பாடுமின்றித் தங்கு தடையின்றிக் கலந்துரையாடல் நிகழும். பரந்த அளவில் தகவலாளி தம் வாழ்க்கை நிகழ்ச்சிகள், தம் எண்ணங்கள், உணர்வுகள் போன்ற பலவற்றை விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைப்பார். அவற்றிலிருந்து ஆய்வாளர் தமக்கு வேண்டியவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

*9.2.2.2* தகவலாளிகளிடம் வினாக்களைத் தொடுப்பதில் உள்ள நெகிழ்வுத்தன்மை-கட்டுப்பாடு அல்லது வரையறை எதுவுமற்றதன்மை-இவ்வகையின் அடிப்படைச் சிறப்பு ஆகும். முன்கூட்டியே வினாக்களை உருவாக்கிக்கொண்டு, ஆய்வாளர் தகவலாளியை இவ்வகைப் பேட்டியில் அணுகுவது இல்லை. அவர்கள் விருப்பம்போல வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் பேட்டியளிக்க வகை செய்வது கட்டமைப்பில்லாப் பேட்டியின் சிறப்பு. ஆய்வாளர் ஏதேனும் ஒன்றை மையமிட்டுத் தூண்டி விடத் தகவலாளி தம் அனுபவ வீச்சால் ஒளியூட்டப்பட்ட தகவல்களை மிகுதியும் கூறுவார். இவ்வகைப் பேட்டியின் அடிப்படையான கட்டுப்பாடற்ற அமைப்பை நன்கு உணர்ந்து பயன்படுத்தினால், தகவலாளியிடமிருந்து ஆய்வாளர் மிகுதியான செய்திகளைப் பெறமுடியும். நுணுக்கமான செய்திகளையும் சொந்த அனுபவங்களையும் தகவலாளியிடமிருந்து பெறலாம். நம்பிக்கைகள், உணர்வுகள் ஆகியவற்றுடன் கூடிய தனிப்பட்ட மனிதன் உறவு, சமுதாய நிலைத் தொடர்பு ஆகியவற்றை அறிய இவ்வகைப் பேட்டி பெரிதும் துணைசெய்யும்.

*9.2.2.3* இவ்வகைப் பேட்டியில் தகவலாளிக்கு விளக்கம் வேண்டிய இடங்களில் மட்டுமே ஆய்வாளர் குறுக்கிட்டு விளக்குவார். தம் வினாக்களில் ஒரு சிலவற்றைக் கூறி, மேற்கொண்டு தரவுகளைத் தருமாறு தகவலாளியைத் தூண்டிவிடும் அளவே ஆய்வாளர் இவ்வகைப்பேட்டியில் செயல்படுவார். தகவலாளி தரும் தகவல்களை அப்படியே பதிவு செய்து, ஆய்விற்கு ஏற்றவற்றைத் தொகுப்பது, ஒவ்வாதவற்றை விட்டுவிடுவது அழுத்தமான வலுவானவற்றை ஆய்வில் வெளிப்படுத்திக் காட்டுவது போன்ற பணிகளைச் செய்யும் உரிமை இவ்வகைப் பேட்டியில் ஆய்வாளருக்கு உள்ளது. இத்தகைய உரிமையும் கட்டுப்பாடற்ற தன்மையும் சிலசமயங்களில் ஆய்வில் இடையூறுகளையும் விளைவிக்கும். கட்டமைப்பில்லாப்

Scanned by TapScanner

பேட்டியால் பெற்ற தரவுகளை ஒத்திட்டுக் காண்பதோ, மேற்கொண்டு பகுத்தாய்வதோ ஆய்வாளருக்கு மிகவும் இடர்ப்பாடான பணிகளாகும். பன்முறை நிகழ்த்தும் பேட்டி வழி ஓரளவிற்கு இவற்றை ஆய்வாளர் நீக்கலாம்.

9.2.2.4 கட்டமைப்பில்லாப் பேட்டியை மேற்கொள்ளும் ஆய்வாளருக்கு ஆய்வுப்பொருளில் ஆழ்ந்த புலமை, நுணுக்கமான தகவல்களை வெளிக்கொணரவல்ல வினாக்களை அடுத்தடுத்து எழுப்பக்கூடிய திறமை, கூர்த்த மதிநுட்பம் ஆகியன வேண்டற்பாலன. பணிவுடன் கேட்டு அனைத்தையும் குறிப்பெடுக்கக் கூடிய திறமை மட்டும் ஆய்வாளருக்குப் போதாது. அத்துடன் தகவலாளியின் உணர்வு, நம்பிக்கை ஆகியவற்றுடன் தற்காலிக மாகவாயினும் தம்மை ஒருசேர வைத்துக்கொள்ளத்தக்க சிறப்பாகச் செயல்படும் ஆற்றலும் இவ்வகைப் பேட்டியில் ஆய்வாளருக்கு வேண்டும். தகவலாளி அப்போதுதான், இயல்பாகத் தங்குதடையின்றிச் செய்திகளைக் கூறுவார். ஆய்வாளரின் ஆய்வுவேட்கையை உணர்ந்து கொள்வதுடன், தம்முள் ஒருவராகக் கலந்து இலங்கும் நெருக்க உணர்வையும் தகவலாளி புரிந்துகொள்வார். தகவலாளியிடமிருந்து மிகுதியான தகவல்களை அறியவேண்டும் என்பதே ஆய்வாளரின் நோக்கம். ஆகவே, தகவலாளியின் சொல், செயல் ஆகியவற்றுடன் தம்மை இசைய வைத்துக்கொண்டுஆய்வாளர் செயல்படவேண்டும். தகவலாளியின் பேச்சுவழக்கு, மரபுத் தொடர்களைத் தாமும் கையாண்டு ஆய்வாளர் வினாக்களை எழுப்புவது தகவலாளிக்கு ஒத்த உணர்வைத் தரும். அப்பாங்கு இவ்வகைப் பேட்டியில் வெற்றியைத் தரும். சான்றாக, பின்னிணைப்பில் இடம் பெற்றுள்ள பேட்டியில், ஆய்வாளரின் வினாக்களில் வைணவ மரபுச் சொற்கள் பயின்று வந்துள்ளதைக் கூறலாம்.[4] மிகுதியான தகவல்களைத் திரட்டக் கட்டமைப்பில்லாப் பேட்டி பெரிதும் துணைசெய்யும்.

9.2.2.5 பிறர்புகாத துறைகளில் ஆய்வை மேற்கொண்டு முதல் ஆய்வை நடத்தும் ஆய்வாளர், ஆய்வுப்பொருள் பற்றிய விரிவான செய்திகளை அறியக் கட்டமைப்பில்லாப் பேட்டியைப் பயன்படுத்தலாம். அப்பொருளுடன் ஆய்வாளருக்கு நெருக்கமான பிணைப்பு ஏற்படுகிறது. ஆய்வுச் சிக்கலின் பல்வேறு தன்மைகளை ஆய்வாளர் உணருகிறார். தகவலாளியின் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் ஆய்வாளர் குறித்துக்கொள்கிறார். இவ்வாறு

Scanned by TapScanner

தம் ஆய்வுப்பொருளில் நுணுக்கமான அறிவை ஆய்வாளர் பெறுவதற்கு இவ்வகைப் பேட்டி பெரிதும் துணைபுரிகிறது. மேன்மேலும் இப்பொருள்பற்றி யார்யாரைப் பேட்டி காணலாம் என்று அறிய ஆய்வாளருக்கு இது உதவும். பின்னர், கட்டமைப்புடைய பேட்டியை மேற்கொள்ளவோ, பன்முறை நிகழும் பேட்டியை மேற்கொள்ளவோ இவ்வகை துணை செய்யும். தெருக்கூத்து, கரகம் போன்ற கலைகளை ஆராயும் ஆய்வாளர் கட்டமைப்பில்லாப் பேட்டியைப் பயன்படுத்திக் கலைஞர்களிடமிருந்து பெரிதும் தகவல்களைப் பெறலாம். அரையர் சேவை பற்றி ஆராயும் ஆய்வாளர் இவ்வகைப் பேட்டியைப் பயன்படுத்தி, ஓர் அரையரைப் பேட்டி கண்டார்.[5] இப்பொருளில் ஆராயவேண்டியுள்ள ஆய்வின் பல கோணங்களை அறிந்துகொள்ள ஆய்வாளரின் இவ்வகைப் பேட்டி பெரிதும் துணைபுரிந்தது.[6] இது, முறைப்படுத்தப்படாத பேட்டி (non directive interview) என்றும் அழைக்கப்படும்.

### 9.2.3 ஒருமுகப்படுத்தும் பேட்டி (Focused Interview)

குறிப்பிட்ட சூழல் ஒன்றில் பங்கேற்று இருந்தவர்களுக்கிடையே நிகழும் பேட்டியாகும் இது. குறிப்பிட்ட திரைப்படம் ஒன்றைப் பார்த்தவர்களிடையே நிகழும் கலந்துரையாடல், குறிப்பிட்ட வானொலி நிகழ்ச்சி ஒன்றைக் குறித்து அதைக் கேட்டவர்களிடையே நிகழும் கலந்துரையாடல் போல்வன ஒருமுகப்படுத்தும் பேட்டியாகும். சில வார இதழ்கள், திரைப்பட விமர்சனத்திற்கு இம்முறையைக் கையாண்டு, அப்பேட்டியைத் தங்கள் இதழ்களில் வெளியிடுகின்றன. திரைப்படத்தை முதலிலே பார்க்கச் செய்து, வரையறுத்த சில வினாக்களுக்கு உட்பட்டே இவ்வகைப்பேட்டி நிகழும். எனவே, உரையாடலில் பங்கேற்கும் மனிதர்களுக்குள்ள சுதந்திரம் கட்டுப்பாடுடையதாகிறது. பெரும்பாலும், இதழ்களில் திரைப்படம் பற்றிய கலந்துரையாடலில் அப்பேட்டியை வழிநடத்திச் செல்பவராக அத்திரைப்படத்துடன் தொடர்புடைய ஒருவர் (கதையாசிரியர், பட இயக்குநர், படத்தயாரிப்பாளர் போன்ற யாரேனும் ஒருவர்) அல்லது இதழின் ஆசிரியர் (அல்லது ஆசிரியர் குழுவைச் சார்ந்த ஒருவர்) இருப்பார். அவர் பெரும்பாலும் அக்குறிப்பிட்ட படத்தின் நல்ல அம்சங்களைக் குறித்தே அக்கலந்துரையாடலை நடத்துவதில் கவனமாக இருப்பார். ஒரு சில சமயங்களில் படத்தின் பிறகூறுகளைப் பற்றி உரையாட முற்படின், இவர் (கலந்துரையாடலை நடத்துபவர்) அவ்விடத்தில் புகுந்து

Scanned by TapScanner

திசைதிருப்புவார். இதற்குக் காரணம், அவர் படத்தின் விளம்பரத்திற்காகவே இதனைச் (ஒருமுகப்படுத்தும் பேட்டியை) செய்வது ஆகும். குறிப்பிட்ட ஒன்றைப் (திரைப்படத்தை) பார்த்தவுடன் தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட மனஉணர்வுகள், ஆளுமைச் செயல்பாடு, மனப் பாதிப்புகள் போன்ற அகமன ஆய்வை நிகழ்த்தி உண்மையை வெளியிடுவது இவ்வகைப் பேட்டியின் தலையாய நோக்கம். ஆயின், இப் பேட்டியைப் பயன்படுத்துபவர்களில் சிலர் இந்த நுட்பங்களை உணர்ந்து செயல்படுவதில்லை என்பதை, இதழ்கள் விளம்பரத் திற்காகவும் வியாபாரத்திற்காகவும் நடத்தும் கலந்துரையாடல் களில் காணலாம்.

### 9.2.4. பன்முறை நிகழும் பேட்டி (Repeated Interview)

சமூக, உளவியல் இயக்கங்கள் படிப்படியாக எவ்வாறு செல்வாக்கு பெறுகின்றன என்று கண்டறிய இவ்வகைப் பேட்டி நிகழ்த்தப்படும். முறையான கால இடையீடுகளில் தொடர்ந்து மீண்டும் நிகழ்த்தப் பெறுவது இது. இது மிகவும் பொருட் செலவும் மனித உழைப்பும் உடைய முறை. நிலையான அமைப்பை உருவாக்கிக்கொண்டு, செயற்பட்டு இப்பேட்டியை நிகழ்த்தவேண்டும். தகவலாளிகள் நிரந்தரமானவர்களாக இருந்தால்தான், பல்வேறு சமயங்களில் மீண்டும் மீண்டும் அவர்களைப் பேட்டி காணலாம். சான்றாக, தேர்தல் காலங்களில், வாக்குப்பதிவிற்குமுன் வாக்காளர்களிடம் இம்முறையில் பேட்டி காண்பதைக் கூறலாம். பல்வேறு காரணங்களால் அடுத்தடுத்து வரும் தேர்தல்களில், தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் வாக்காளர்களின் மனநிலையை அறிய இம்முறை உதவும். மிக்க பொருட்செலவு, மனித ஆற்றல், உழைப்பு, காலம் இவற்றைக் கொண்டு நிகழ்த்தவேண்டிய முறை இது. எனினும் இவ்வகைப் பேட்டியால் திரட்டப்பெறும் தரவுகள் திட்டவட்டமானவை. மேற்கொண்டு பகுத்தாய, அட்டவணைப்படுத்த, அளந்தறிய ஏற்றதாக விளங்கும் மெய்ம்மைகள் இவை. எனவே, பன்முறை நிகழும் பேட்டியால் பெறும் தரவுகளின் மதிப்பு மிகுதியானது.

### 6.2.5 ஆழ்ந்த பேட்டி (Depth Interview)

மனித மனத்தில் ஆழ்ந்து கிடக்கும் உணர்வு, எண்ணங்கள், ஆசைகள், நிறைவேறாத சபலங்கள் போன்றவற்றை ஆராய உதவுவது ஆழ்ந்த பேட்டியாகும். மருத்துவ உளவியலாரும்

சமூக ஆய்வாளரும் இம்முறையைப் பெரிதும் பயன்படுத்துகின்றனர். நன்கு பயிற்சி பெற்ற திறமைவாய்ந்த ஆய்வாளர்கள் கவனமுடன் நீண்டநேரம் ஒலிப்பதிவுக் கருவிகளுடன் இவ்வகைப் பேட்டியை மேற்கொள்ளலாம். இவ்வாறு செய்தால் மிகுந்த பயன் விளையும்.

## 9.3 பேட்டிக்குரிய ஆயத்தம்

9.3.1 ஆய்வாளர், தகவலாளியைக் கண்டு பேட்டி காணுமுன் ஆய்வுப்பொருள்பற்றி மிகுதியும் நுட்பமாக அறிந்திருக்க வேண்டும். நுட்பமான தகவல்களைத் திரட்டுமாறு வினாக்களை அவர் தகவலாளியிடம் கேட்கவேண்டும். தகவலாளி விடைதரத் தயங்குமிடத்தில் விட்டுவிட்டு, வேறுவினாக்களை எழுப்பி, பேட்டியைப் பயனுள்ளதாக ஆய்வாளர் நிகழ்த்த வேண்டும். தகவலாளி விடை தருவதற்குத் தயங்கும் வினாக்களை ஆய்வாளர் வற்புறுத்தக் கூடாது. பேட்டிக்கு முன்பே, வினாக்களை ஆய்வாளர் உருவாக்கிக் கொள்வது நலம்.

9.3.2 பேட்டிக்குச் செல்வதற்குமுன், என்னென்ன தகவல்களைத் தகவலாளியிடமிருந்து பெறவேண்டும் என்பதற்குத் துணைசெய்யும் **பேட்டி வழிகாட்டி** (Interview guide) ஒன்றை ஆய்வாளர் உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். **பேட்டி வழிகாட்டி** என்பது பேட்டியில் மேற்கொள்ளப் போகும் பல்வேறு செய்திகளைப் பற்றிய சுருக்கமான எழுத்து வடிவமாகும். இது, பேட்டியின் திட்டம், கலந்துரையாட வேண்டிய பல்வேறு தலைப்புகள், சில முக்கியமான வினாக்கள் பொதுவாகப் பேட்டியில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் போன்றவற்றை உடையது. பேட்டி முழுவதையும் உருவாக்கித் தரும் முற்கூட்டிய வார்ப்பு என்று பேட்டி வழிகாட்டியை எண்ணுதல் கூடாது. பேட்டி நிகழ்கையில் ஆய்வாளருக்கு வழிகாட்டி, செய்திகள் மறந்துவிடாமல் இருக்குமளவிற்கு நினைவூட்ட உதவும் கருவியே அது. ஆய்வாளர் முழுவதும் தன் நினைவாற்றலையே நம்பாமல், நன்கு செயற்படுவதற்குப் பேட்டி வழிகாட்டி உதவும். உணர்ச்சிகரமான பகுதிகளைத் தகவலாளி கூறிவரும்போது, அடுத்து எழுப்ப வேண்டிய வினாவை ஆய்வாளர் மறந்து விடலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் ஆய்வாளர்க்கு வழிகாட்டி உதவும். ஒன்றும்

Scanned by TapScanner

விட்டுவிடாமல் இருக்கிறதாவென்று ஆய்வாளர் சரிபார்த்துக் கொள்ள வழிகாட்டி உதவும். பல்வேறு தகவலாளிகளிடம் ஒரே பொருள் பற்றிய பேட்டிகளை மேற்கொள்ள வழிகாட்டி உதவும்.

*9.3.3* தக்க தகவலாளிகளைத் தேர்ந்தெடுப்பது, அவர்களிடம் முன்கூட்டியே பேட்டிக்கு நாள், காலம், உறுதி செய்து கொள்வது ஆகியவற்றில் ஆய்வாளர் ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும். குறித்த காலத்தில் தவறாது சென்று பேட்டியை ஆய்வாளர் தொடங்க வேண்டும். காலதாமதம் பேட்டியைச் சுவையற்றதாக்கி, சரியான தரவுகள் கிடைக்காமற்போக வழிசெய்யும். பேட்டியின்போது ஒலிப்பதிவு செய்துகொள்ளக் கருவிகளை எடுத்துச் செல்ல வேண்டும். தகவலாளியுடன் ஆய்வாளருக்குத் தனிப்பட்ட முறையில் தொடர்பு ஏற்பட பேட்டி உதவுகிறது. பேட்டியின் இடையிடையே ஆய்வாளரிடம் தகவலாளி எழுப்பும் வினாக்களுக்கும் தக்க முறையில் விடையளிக்கவல்ல திறமையும் நுட்பமும் காலச் செயலறியும் ஆய்வாளருக்கு வேண்டும்.

## 9.4 பேட்டி நிகழ்த்துவதில் சில உத்திகள்

பேட்டியைத் துவக்குவது, சுவைபட நடத்திச் செல்வது, இனிய முறையில் முடிப்பது ஆகியன இருவருக்கும் உரிய கடமை. இனிய முகமும் சுவையான பேச்சும் தங்குதடையின்றிக் கலகலப்பாக உரையாடுவதும் பேட்டிக்கு வேண்டற்பாலன. பேட்டியின் இடையிடையே, தகவலாளி தொடங்கிய செய்தியை விட்டுவிட்டு வேறு எங்காவது சென்றாலும் அவருடைய கவனத்தை மீண்டும் தொடங்கிய இடத்திற்கு ஆய்வாளர் கொண்டுவரவேண்டும். அத்தகைய சந்தர்ப்பங்களில், 'தாங்கள் என்னிடம் ............ பற்றிச் சுவைபடச் சொல்லிக் கொண்டிருந்தீர்கள். அதைப்பற்றிச் சற்று விரிவாக விளக்கியருளுங்கள்" என்பன போன்ற நயமான சொற்களை ஆய்வாளர் சமயமறிந்து பணிவுடன் கூறுதல் வேண்டும். இடையிடையே தகவலாளிக்கு ஊக்கமளிக்கும் முறையில் ஆய்வாளர் பேசவேண்டும். "தாங்கள் சொல்வது சிந்தனையைத் தூண்டும் வண்ணமுள்ளது. இதுவரையில் எண்ணிப்பார்க்காத புதியகோணங்களில் தாங்கள் சிந்தித்துப் பார்க்கின்றீர்கள். உண்மையிலேயே இப்பேட்டி பயனுடையதாகிறது" என்பன போன்ற சொற்களை ஆய்வாளர் கூறவேண்டும். இவை புகழுரையோ, தகவலாளியை

Scanned by TapScanner

மனம் மலரச் செய்யும் பாராட்டுரையோ அன்று. ஆய்வாளரின் இத்தகைய சொற்கள் பேட்டியைப் பயனுடையதாக்கும். ஒலிப்பதிவுக் கருவிகளை ஆளுவதை விரும்பாத தகவலாளி, அத்தகு போது, ஆய்வாளர் அவற்றைப் பயன்படுத்தக் கூடாது. இடங்களில் ஆய்வாளர் சுருக்கெழுத்தில் எழுதிக்கொள்வது பயனுடையது. அல்லது குறிப்புக்களாகப் பேட்டியின் இன்றியமையாச் செய்திகளைக் குறித்துக்கொண்டு, பிறகு முழுமையாக எழுதவேண்டும். பேட்டி திடீரென்று முடிந்தது போல உணர்வைத் தகவலாளிக்கு ஏற்படுத்தாமல், இயல்பாக முடியவேண்டும். பேட்டியை முடிக்கும் முன்பாக, அனைத்துச் செய்திகளையும் உரையாடி விட்டோமா என்பதை ஆய்வாளர் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். தகவலாளிக்கு நன்றி கூறிப் பேட்டியை ஆய்வாளர் முடித்தல் வேண்டும்.

## 9.5 பேட்டியால் விளையும் பயன்கள்

9.5.1 பிற ஆய்வு முறைகளுடன் தொடர்புடைய ஒன்றாகப் பேட்டி உள்ளது. நன்கு ஆற்றல் வாய்ந்த ஆய்வாளர்கள் பேட்டியைப் பயன்படுத்தி நுட்பமான தரவுகளைத் திரட்டியுள்ளனர். இயல்பான அதன் நெகிழ்ச்சித் தன்மை காரணமாகப் பேட்டி மிகுந்த பயன் விளைவிக்கும். பிற முறைகளில் காணப்படுவதை விடவும் பேட்டியில் ஆய்வாளர் தகவலாளி தொடர்பின் நெருக்கம் மிகுதி. எனவே, கிடைக்கும் தரவுகளின் மதிப்பும் மிகுதி. முரண்பாடு கண்டவிடத்து முரணறுத்து மெய்ம்மைகளின் உண்மைத் தன்மையை ஆய்வாளர் ஒத்திட்டுக் காணலாம். அதற்கேற்ப மீண்டும் மீண்டும் சிலவற்றைக் கேட்டு உறுதிசெய்துகொள்ளலாம். வினாநிரலைப் பயன்படுத்துவதில் காட்டும் ஆர்வத்தையும் ஒத்துழைப்பையும்விடப் பேட்டியில் தகவலாளி மிகுந்த ஈடுபாட்டைக் காட்டுகிறார்.

9.5.2 வினாநிரலை நிரப்புவதற்குத் தகவலாளி கல்வியறிவு உள்ளவராக இருத்தல் வேண்டும். ஆனால் கல்வியறிவு அற்றவர்களிடமும் பேட்டி முறையைப் பயன்படுத்தலாம். பேட்டியால் கிடைக்கும் தரவுகள் சரியானவையாகவும், நம்பகத் தன்மை மிக்கதாகவும், ஒத்திட்டுக்காணவல்லதாகவும் உள்ளன. மிகுதியான தரவுகளைப் பேட்டியால் திரட்டலாம்.

## 9.6 இம்முறையிலுள்ள இடர்ப்பாடுகள்

உணர்ச்சியோடு சம்பந்தப்பட்ட செய்திகளில் பேட்டியைப் பயன்படுத்துவது இயலாது. தகவலாளி அத்தகைய சந்தர்ப்பங்களில் சரியாக ஒத்துழைக்க விரும்பமாட்டார். சரியான முறையில் மனிதப் பண்புகளையும் உளவியல் போக்குகளையும் ஆய்வாளர் நுட்பமாக அறிந்திருக்க வேண்டும். இல்லையேல் பேட்டி இடர்ப்பாடு மிக்கதாகிவிடும். தகவலாளியின் சார்புடைமை - அகநோக்கு - (subjectivity) காரணமாகப் பேட்டியில் கிடைக்கும் தரவுகளை ஆய்வாளர் நம்புவது இம்முறையில் இடர்ப்பாடுடைய ஒன்று. தகவலாளி உணர்வு வயப்பட்டுக் கூறும் தரவுகளை ஒத்திட்டுக் காண்பது இயலாத செயல். மிகுதியான உழைப்பும் கால, பொருள் செலவும் உடைய முறை இது. ஆய்வாளருக்கு நல்ல பயிற்சியும், ஆய்வுப் பொருளில் தெளிந்த அறிவும் இல்லாதவிடத்துப் பேட்டி பயனற்றதாகிவிடும். ஆய்வாளரின் சொந்த விருப்பு வெறுப்பு பேட்டியில் தலைகாட்டக்கூடாது. அவை, தகவலாளியைப் பாதித்து, ஆய்வைப் பாழ்படுத்திவிடும்.

9.7 இத்தகைய இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், நட்பான சூழ்நிலை, ஆய்வாளரின் இனிய கனிவான கலகலப்பான உரையாடல் பாங்கு, ஆய்வுப் பொருளில் அவருக்குள்ள நுட்பமான அறிவு, காலச்செறிவு ஆகியன தகவலாளியிடமிருந்து மிகுதியான தரவுகளைத் திரட்ட உதவும். எனவே, பேட்டி பயனுடைய முறையாகின்றது. தகவலாளிக்குக் கலந்துரையாட ஆய்வாளர் அருகிலேயே இருப்பதால், தங்குதடையின்றிச் செய்திகளைக் கூறமுடியும். சமூக, உளவியல், அறிவியல், இதழியல் போன்ற துறைகளில் மட்டுமின்றி இலக்கிய ஆய்விற்கும் ஏற்ற முறை இது. அண்மைக்காலத்தில் ஆய்வாளர்கள் இலக்கிய ஆய்வுகளில் பேட்டியைக் கையாண்டு, தரவுகளைத் திரட்டி, ஆய்வைச் செம்மையுடையதாக்கி வருகின்றனர்.

Scanned by TapScanner

# 10

# தமிழியல் ஆராய்ச்சியின் தோற்றமும் வளர்ச்சியும்

முன்னுரை:

*10.1.1* படைப்பிலக்கியம் வேறு; ஆராய்ச்சி வேறு. படைப்பிலக்கியத்தையும் ஆராய்ச்சியையும் வேறுபடுத்திக் காண இயலாது பலர் மயங்குகின்றார்கள். ஆராய்ச்சி செய்து ஆய்வேடு எழுதுவதைப் படைப்பிலக்கியமாகவே சிலர் தமிழில் எழுதியுள்ளனர். ஆய்வாளருக்குத் தேவையான சிந்தனை ஆற்றலும், வகுத்தும் தொகுத்தும் காணவேண்டிய இன்றியமையாப் போக்கும் படைப்பிலக்கிய ஆசிரியருக்கும் தேவைப்படலாம். நீல பத்மநாபன் பொறியியல் வல்லுநராகப் பணியாற்றுபவர். பொறியியல் ஆய்விற்கு எவ்வளவு உழைக்கின்றாரோ, அந்த அளவிற்குப் படைப்பிலக்கியத்தை உருவாக்கவும் உழைப்பதாக அவர் கூறுகின்றார். இது உண்மையாகவே இருக்கலாம். தன்னிகரற்ற படைப்பிலக்கியம் ஒன்றிற்கு டாக்டர் பட்டம் கொடுக்கலாம். இதனால் படைப்பிலக்கியமும் ஆராய்ச்சியும் ஒன்றெனக் கூறமுடியாது. இரண்டிற்குமிடையே உள்ள வேறுபாட்டைக் காண்போம்.

*10.1.2* ஆராய்ச்சி என்பது வகைதொகை அறிவியல் (classificatory science) ஆகும். திரட்டிய தரவுகளை விளக்கம் பெற்ற தெளிவான கோட்பாடுகளின் அடிப்படையில் வகுத்தும் தொகுத்தும் கொடுப்பது ஆராய்ச்சி. இவ்வாறு வகுத்தும் தொகுத்தும் கொடுப்பது எந்த அளவிற்குப் பொதுத்தன்மை உடையதாக அமைகின்றதோ, அந்த அளவிற்கு ஆராய்ச்சி மதிப்புடையதாகிறது. திரட்டிய தரவுகள் அனைத்தையும் கொண்டு, மயக்கமின்றித் தெளிவும், எளிமையும், செறிவும் மிக்கதாக வகை தொகை செய்தல் சிறப்புடையது. வகுப்பதும் தொகுப்பதும் கிடைத்த தரவுகளின் அடிப்படையிலே நிகழ

Scanned by TapScanner

வேண்டும். ஆய்வாளரின் இந்த வகை தொகைப் பணியை யார் சோதித்துப் பார்த்தாலும், இக்கோட்பாடு ஏற்புடைத்தே என்று கூறுமளவு அவை அமைதல் வேண்டும். திரட்டிய தரவுகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக, அனைத்திற்கும் உண்மை உடையதாக வகைதொகை இருத்தல் வேண்டும். படைப்பிலக்கிய ஆசிரியர், வாழ்க்கையைக் கூர்ந்து நோக்குகிறார். வாழ்க்கையிலிருந்தே தம் படைப்பிலக்கியத்திற்குத் தரவுகளைத் திரட்டிக் கொள்கிறார். தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் தம் அனுபவத்துடன் கற்பனை கலந்து இலக்கியமாக்குகிறார். திரட்டிய தரவுகளைக் கோவைப்படுத்தும்போது அவற்றைத் தாண்டிச் செல்லுதல் கூடாது என்று படைப்பிலக்கிய ஆசிரியருக்கு வரையறை கூறமுடியாது. தம் கற்பனை ஆற்றல் கைகொடுக்க அவர் இலக்கியம் உருவாக்குகிறார். திரட்டிய தரவுகளுக்கு அப்பாற்பட்டு, கற்பனையைக் கலக்கும் இந்தச் சுதந்திரம் ஆய்வாளருக்குக் கிடையாது.

10.1.3 ஆராய்ச்சி முடிவுகளைத் தெளிவாக, மயக்கமற்ற தொடர்களில், அணிகளின் உதவியின்றி ஆய்வாளர் கூறுதல் வேண்டும். படைப்பாசிரியர் மொழியை ஆள்கையில் இவ்வுத்திகளை எல்லாம் பின்பற்றி எழுதமாட்டார்.

10.1.4 படைப்பிலக்கியம் பா வடிவிலும் இருக்கலாம்; உரைநடையிலும் இருக்கலாம். ஆனால், இப்பொழுது ஆராய்ச்சி உரைநடையிலேயே எழுதப்படுகின்றது.

10.2.1 தமிழில் தோன்றிய - நமக்கு இப்பொழுது கிடைக்கக் கூடிய - முதல் நூல் தொல்காப்பியம். இது ஓர் ஆராய்ச்சி நூல். அதிலும் சூத்திர வடிவில் எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல் இது. தொல்காப்பியம் எவ்வாறு ஆராய்ச்சி நூலாகும் என்று வினா எழலாம். தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள் என்று மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது. எழுத்தும் சொல்லுமே பழந்தமிழின் இலக்கணம். இலக்கணம் எதுவும் ஆராய்ச்சியே. மொழியில் பயன்படும் ஒலிக்கூறுகள், அவைகளால் ஆகிய உருபன், சொல், சொற்றொடர் இவைகளைத் திரட்டி, அத்தரவுகளின் அடிப்படையில் அவற்றை வகைதொகை செய்து கூறுவதே இலக்கணம். தொல்காப்பியர் இதைத்தானே செய்துள்ளார். பொருள் இலக்கணம், தமிழ்ப்பாக்களைப் பற்றி எழுந்த ஆராய்ச்சி. இது இலக்கிய ஆராய்ச்சி. தமக்கு முன்பு தோன்றிய பாக்களை அகம், புறம் என்று தொல்காப்பியர்

பகுத்தார். அகப்பாடல்களைப் பாத்திரங்களின் கூற்றாகவும், புறப்பாடல்களைத் திணை, துறைகளாகவும் அவர் வகுத்தார். செய்யுள் வகை, அவற்றின் இலக்கணம், பாக்களில் பயின்று வரும் அணி, மெய்ப்பாடு, உவமை ஆகியவைகளைத் தொகுத்துத் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் கூறியுள்ளார். இவ்வாறு வகுத்தும் தொகுத்தும் கொடுப்பது இலக்கிய ஆராய்ச்சியேயாகும். இவைகளுக்கெல்லாம் சில அடிப்படைக் கோட்பாடுகளை உருவாக்கி, அவற்றின் அடிப்படையிலே தொல்காப்பியர் வகை தொகை செய்துள்ளார். ஆனால், தாம் பின்பற்றிய கோட்பாடு களை அவர் விளக்கவில்லை. அவர் பின்பற்றிய கோட்பாடுகளை, அவருடைய இலக்கண நூல்களை அடிப்படையாகக்கொண்டு தெளிவாக்குவதே தற்போது நம் ஆராய்ச்சிகளில் ஒன்றாக விளங்குகின்றது.

10.2.2 தம்முடைய ஆராய்ச்சி முடிவுகளைக் கூறும்பொழுது, அணிநயமிக்க நடையில் கற்பனையைக் கலந்து தொல்காப்பியர் கூறவில்லை. உள்ளதை உள்ளவாறே அவர் கூறுகிறார். தொல்காப்பிய உரையாசிரியர்கள், சிற்சில கலைச்சொற்களை விளக்குகையில் நயம்பாராட்டி, அணிகளை ஆண்டு விளக்க முற்படுகின்றனர். தம் காலத்திலும் தமக்கு முன்புமிருந்த மொழியின் செயற்பாட்டை, நிகழ்வைத் தொல்காப்பியர் விளக்குகிறார். ஒருவகையில் ஆராய்ச்சிகள் அனைத்தும் நிகழ்வு ஆய்வே (case study) ஆகும். தமிழ்மொழியின் செயற்பாடு, நிகழ்வு, தமிழ் இலக்கியத்தின் செயற்பாடு, நிகழ்வு ஆகியவைகளையே தொல்காப்பியர் விளக்கியுள்ளார். கூட்டியோ குறைத்தோ கற்பனை கலந்தோ அவர் கூறவில்லை. கூட்டியோ குறைத்தோ கூறுவது ஆராய்ச்சி ஆகாது. சிறிது கற்பனை கலந்துவிட்டாலும் இரட்டுறமொழிந்தோ அணி வகைகளை ஆண்டோ விளக்க முற்பட்டாலும் அது படைப்பிலக்கியமாக மாறிவிடும்.

10.3.1 தொல்காப்பியர் காலத்தை அடுத்துச் சங்ககாலம் முதல், பக்தி இலக்கிய காலம் வரையில் தொடர்ந்து படைப்பிலக்கிய காலமாகவே ஓராயிரம் ஆண்டுகள் சென்றிருக்கின்றன. இக்காலகட்டங்களில் எழுந்த ஆராய்ச்சி, தொகை நூல்களின் தோற்றமே. இம்முயற்சி கி.பி. நான்கு அல்லது ஐந்து நூற்றாண்டுகளிலேயே தோன்றியிருக்க வேண்டும் என்பது பலருடைய கருத்து. சங்க நூற்களைப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை எனவும், சங்கம் மருவிய கால அற நூல்களைப்

Scanned by TapScanner

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எனவும் தொகுத்தனர். தேவாரப் பாக்களைத் திருமுறைகளாக நம்பியாண்டார்நம்பி தொகுத்தார். ஆழ்வார்களின் அருளிச்செயல்களை நாலாயிர திவ்யப் பிரபந்தமாக நாதமுனிகள் தொகுத்தார். இக்கால கட்டத்தில் தோன்றிய மற்றொரு தொகை நூல் நிகண்டு ஆகும். தொகை நூல்கள் பற்றியும், நிகண்டுகள் பற்றியும், அவை என்னென்ன அடிப்படைக் கோட்பாடுகளின் அடிப்படையில் வகை தொகை செய்யப்பட்டன என்றும் ஆராய்வதற்கு மிகுதியும் இடமுள்ளது. இவ்வகையில் தொகை நூல்கள் பற்றியும் நிகண்டுகள் பற்றியும் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களின் ஆராய்ச்சி இங்குக் குறிக்கத்தக்கது.[1]

10.3.2 தொகை நூல்களின் தொகுப்பு எவ்வாறு ஆராய்ச்சி ஆகும்? சங்கப்பாக்கள் வாய்மொழிப் பாடல்கள். பலர் பல காலங்களில் பாடிய பாடல்களை எல்லாம் தொகுத்துத் திரட்டி, அகம், புறம் என்னும் இரு பெரும் பிரிவுகளாக முதலில் பிரித்தனர். பின்னர் பாடல்களின் அடிவரையறைகளை அடிப்படையாகக் கொண்டு பல தொகை நூல்களாகப் பகுத்தனர். அகப்பாடல்கள் ஒவ்வொன்றுக்கும் பின்னர், யார் யாரிடம், எப்பொழுது கூறியது என்று நிகழிடம் வகுத்தனர். புறப்பாடல்களுக்குத் திணை, துறை என்று வகுத்தனர். இந்த வகைதொகைகளை எல்லாம் அப்பாடல்களைப் பாடிய புலவர்கள் செய்திருக்க முடியாது. தொகுத்தவர்கள் செய்திருக்க வேண்டும் எனலாம். இவ்வாறு இப்பாடல்களை வகுப்பதற்கும் தொகுப்பதற்கும் எவ்வளவு ஆராய்ச்சிகள் நடைபெற்றிருக்க வேண்டும்? இதற்கு ஒரு கோட்பாட்டை உருவாக்கி இருக்க வேண்டும். தொல்காப்பியரின் கோட்பாட்டையும் அப்படியே இதில் பின்பற்றவில்லை. பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பா மாலை கோட்பாட்டையும் அப்படியே முழுமையாகப் பின்பற்ற வில்லை. அப்படியானால் சங்கப்பாக்களின் தொகுப்பாசிரியர்கள் பின்பற்றிய கோட்பாடு வேறொன்றாக இருத்தல் வேண்டும். அக்கோட்பாடு இன்று நமக்குக் கிடைக்கவில்லை. சங்கப் பாக்களை வகை தொகை செய்தவர்கள் பின்பற்றிய கோட்பாடுகள் எவை எனக் கண்டறிந்து அவற்றை உருவாக்குவதே மேற்கொள்ள வேண்டிய ஆராய்ச்சிகளில் ஒன்றாகும்[2] தேவார, திவ்யப்பிரபந்தப் பாக்களை வகைப்படுத்தும்போது, தலங்கள், பண்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வகை தொகை செய்து தொகுத்தனர். நிகண்டுகளில் ஒரே பொருளைத் தரும் சொற்கள்

Scanned by TapScanner

அனைத்தையும் ஒன்றாகத் திரட்டிக் கொடுத்தனர். இவ்வாறு தமிழாராய்ச்சி வரலாற்றில் இரண்டாவது கட்டமாகத் தொகை நூல்கள் தோன்றின.

உரையாசிரியர்கள் பற்றிய மதிப்பீடு.

10.4 இதன் பின்பு தோன்றிய ஆய்வாளர்கள், உரையாசிரியர்களேயாவர். முதன்முதல் தோன்றிய உரை இறையனார் களவியலுக்குத் தோன்றிய நக்கீரரின் உரையாகவே இருக்கலாம். இவரைத் தொடர்ந்து இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் உள்ளிட்ட திருக்குறள் உரையாசிரியர் பதின்மர் எனப் பலர் தோன்றினர். இவர்களுள் தொல்காப்பியத்திற்கும் திருக்குறளுக்கும் பலர் உரை எழுதினர். இவர்கள் புதிதாகக் கண்ட உண்மைகள் பலவாகும். தங்களின் ஆராய்ச்சி முடிவுகளைத் தாமே கூறியனவாக இல்லாமல், மூலநூல் ஆசிரியர்கள் கருதிய உண்மைகளாகத் தங்கள் உரைகளில் கூறினர். இலக்கணத்திற்கு உரை எழுதும்பொழுது இவர்கள் கண்டு கூறிய உண்மைகள் பல. தொல்காப்பியர்க்குப் பின்பு தோன்றிய மொழியியல் வல்லுநர்கள் இந்த உரையாசிரியர்களே. ஆழ்வார்களின் பாசுரங்களுக்கு எழுந்த வைணவ உரையாசிரியர் களின் உரைகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தகுந்த வளர்ச்சியாகும். இவர்கள் தமிழையும் வடமொழியையும் கலந்து மணிப்பிரவாள நடையில் எழுதினர். நம்மாழ்வாரின் திருவாய் மொழிக்கு மிகுதியான உரைகள் தோன்றின.

10.5 உரையாசிரியர்களின் காலத்திற்குப் பின்பு தமிழ் இலக்கிய வரலாற்றில் புதிய வளர்ச்சி ஒன்று தோன்றியது. சிற்றிலக்கியங்கள் என்று புது வகையான இலக்கிய மரபு ஒன்று தோன்றியது. திணை, துறைகளையும், நாட்டுப்புற மரபுகளையும் அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொன்றுக்கும் தனித்தனி இலக்கிய வடிவம் கொடுத்துப் பாட முயன்றனர். இத்தகைய இலக்கிய மரபு திராவிட மொழிகள் பிறவற்றில் காணப்படாத ஒரு புதிய முயற்சி. உரையாசிரியர்களுக்குப் பின் சிவஞான முனிவர், வைத்தியநாத தேசிகர் போன்ற சிலரைத் தவிர ஐரோப்பியர் வருகைக்கு முன்பு எத்தகைய ஆராய்ச்சியும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

10.6.1 வெளிநாட்டார் தொடர்பினால் ஆங்கிலக் கல்வி பரவியது. இதனால் ஆங்கிலத்தில் புலமையுடைய பலர் தமிழாராய்ச்சியில் இறங்கினர். பூரணலிங்கம் பிள்ளை,

Scanned by TapScanner

கே.என். சிவராஜ பிள்ளை, சாமிகண்ணு பிள்ளை, சுந்தரம் பிள்ளை போன்றோர் தமிழாராய்ச்சியைத் தொடங்கி வைத்தனர். தமிழைப் பற்றி ஆங்கிலத்திலேயே இவர்கள் எழுதி வந்தனர். மேலைநாட்டு முறையில் எழுந்த ஆராய்ச்சிகளெல்லாம் தொடக்ககாலத்தில் ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டன. இவர்களைத் தொடர்ந்து கா. சுப்பிரமணிய பிள்ளை, வையாபுரிப் பிள்ளை, மறைமலை அடிகள், சோமசுந்தர பாரதியார், சேதுப் பிள்ளை, விபுலானந்த அடிகள் ஆகியோர் தமிழில் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், நூல்களையும் வெளியிட்டனர். இவர்களில் பெரும்பாலோர் சட்டம் பயின்று வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டவர்கள். தமிழ்க் கல்வியும், தமிழாராய்ச்சியும் இவர்களுக்குப் பொழுதுபோக்கு. சட்டப் பயிற்சியின் துணையால் சிக்கல்களின் இருபக்கங்களையும் சிந்தித்துக் காரணகாரியங்களோடு தம் கொள்கைகளை நிலைநாட்டும் ஆற்றலுடையவர்களாக இவர்கள் திகழ்ந்தனர்.

10.6.2 வெளிநாட்டவர் வருகையினால் ஏற்பட்ட மற்றொரு ஆராய்ச்சிப் போக்கு திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆராய்ச்சியாகும். இத்தகைய ஆராய்ச்சியைக் கால்டுவெல் நூற்றுப்பத்து ஆண்டுகளுக்கு முன் தொடங்கி வைத்தார். அவரைப் பின்பற்றி L.V. ராமசாமி ஐயர் போன்றோர் பல கட்டுரைகளை எழுதினர்.

10.6.3 இக்காலகட்டத்தில், ஆங்கிலக் கல்வியறிவு இன்றித் தனித்தமிழ் அல்லது தமிழும் வடமொழியும் கற்றோர் பலர் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். ந.மு. வேங்கடசாமி நாட்டார், ரா. ராகவையங்கார், மு. ராகவையங்கார், பின்னத்தூர் நாராயண சாமி ஐயர், ஔவை துரைசாமிப்பிள்ளை, பண்டிதமணி, வெள்ளை வாரணனார் முதலியோர் இக்குழுவில் அடங்குவர். தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர் பண்டைத்தமிழ் இலக்கியச் செல்வங்கள் பெரும்பாலானவற்றை ஏட்டிலிருந்து பதிப்பித்தார். ஏட்டுச் சுவடியியல், மூல பாட ஆய்வியல், பதிப்புக்கலை போன்ற அனைத்திற்கும் முன்னோடியாக அவர் திகழ்கிறார். உ.வே.சா அவர்களைப் பின்பற்றி மேற்கூறிய அறிஞர் பெருமக்கள் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்தும் அவற்றிற்கு உரைகண்டும் தமிழ் ஆராய்ச்சியை வளர்த்தனர்.

10.6.4.1 மேலைநாட்டார் தொடர்பினால் தமிழில் பி.ஏ., எம்.ஏ. போன்ற பட்டப்படிப்புகள் தோன்றின. தொடக்க

Scanned by TapScanner

காலத்தில், இந்நூற்றாண்டின் முப்பதுகளில் தமிழ் எம்.ஏ. பட்டமென்பது சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் பட்டமாகவே இருந்தது. செங்கல்வராய பிள்ளை, சோமசுந்தர பாரதியார் போன்றோர் இவ்வாறு தமிழில் எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள். செங்கல்வராய பிள்ளை தமிழ் உரைநடை பற்றியும் சோமசுந்தர பாரதியார் திருவள்ளுவரைப் பற்றியும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதிப்பட்டம் பெற்றனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1931-இல் முதன்முதலில் தமிழ் பி.ஏ. ஆனர்ஸ் வகுப்பைத் தொடங்கியது. அப்பொழுது அது மூன்றாண்டுக் கல்வி. முதலில் இதில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்றவர்கள் ஆலாலசுந்தரம் செட்டியார், அருணாசலம் பிள்ளை, ஆர். நரசிம்மன் ஆகிய மூவர். இவர்கள் மூவரும் 1934-இல் பி.ஏ. ஆனர்ஸ் பட்டம் பெற்றனர். இவர்களோடு இரண்டாமாண்டில் சேர்ந்தவர்கள் எஸ். உருத்திரபாரதி, செல்வநாயகம், செந்திப் பெருமாள், சீனிவாசாச்சாரியார் என்னும் நால்வர் ஆவர். இவர்கள் 1934-இல் பட்டம் பெற்றனர். இரண்டாமாண்டில் சேர்ந்த இவர்கள் எம்.ஏ. என்று அதே ஆண்டில் பெற்றனர்.

10.6.4.2 இரண்டாவது அணியாக 1935-இல் எழுவர் பட்டம் பெற்று வெளிவந்தனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், எஸ். ஆறுமுக முதலியார், முத்துசிவன் ஆகியோர்.

10.6.4.2 இங்கு 1931-1933 ஆண்டுகளில் சுவாமி விபுலானந்த அடிகளும், 1933-1936 வரை டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியாரும் பேராசிரியர்களாகப் பணியாற்றினர். பின்னர் பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார், சேதுப்பிள்ளை, ந.மு. வேங்கடசாமி நாட்டார், பலராமையர், பூவராகம் பிள்ளை, S.K. கோவிந்தசாமிப்பிள்ளை, கா. சுப்பிரமணி பிள்ளை போன்றோர் தொடக்ககாலத்தில் பேராசிரியர்களாக இருந்து தமிழ் ஆராய்ச்சிக்கு அடிகோலினர்.

10.6.4.3 சென்னைப் பல்கலைக்கழகத்தில் பச்சையப்பன் கல்லூரி, தமிழை வளர்க்கும் தாயகமாக விளங்கியது. 1944-இல் பி.ஓ.எல் (ஆனர்ஸ்) என்ற மூன்றாண்டுப் பட்டப் படிப்பைத் தொடங்கினர். மோசூர் கந்தசாமி அவர்கள், டாக்டர் மு.வ. அவர்கள், டாக்டர் துரை அரங்கனார், பண்டித நடேசநாயகர்,

Scanned by TapScanner

அ.ச. ஞானசம்பந்தன், அ.மு. பரமசிவானந்தன், அன்பு கணபதி முதலியோர் இங்கு ஆசிரியர்களாக இருந்து தமிழ் பயிற்றுவித்தனர். முதல் பி.ஓ.எல் (ஆனர்ஸ்) தேர்வு 1945-இல் நடைபெற்றது. அதற்கு மாணவர்கள் மிகுதியும் வருவதில்லை. 1949-இல் அப்படியே பி.ஏ. (ஆனர்ஸ்) என்று மாற்றப்பட்டது.

10.7.1 1945-ஆம் ஆண்டு வரையிலும் எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள் எம்.லிட், பிஎச்.டி போன்ற ஆராய்ச்சிப் பட்டங்களுக்கு மிகுதியும் ஈடுபடவில்லை. 1945-இல் தெ.பொ.மீ. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் ஆனார். இதே காலகட்டத்தில் டாக்டர் மு.வ. அவர்கள் சென்னையில் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்து கொண்டு ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டார். இன்று தமிழ் ஆராய்ச்சியில் முன்னணியில் நிற்பவர்கள், தெ.பொ.மீ., மு.வ. ஆகிய இருவரில் ஒருவரால் உருவாக்கப்பட்டவர்களே ஆவர். வி.ஐ. சுப்ரமணியன், முத்துச்சண்முகன், அகஸ்தியலிங்கம், ச.வே. சுப்பிரமணியன் போன்றோர் டாக்டர் தெ.பொ.மீ. அவர்களால் உருவாக்கப்பட்டவர்கள். சி. பாலசுப்பிரமணியம், ம.ரா. போ. குருசாமி, ரா. சீனிவாசன், சஞ்சீவி, சுப. அண்ணாமலை போன்றோர் டாக்டர் மு.வ. அவர்களால் உருவாக்கப் பட்டவர்கள். இப்போது இவர்களின் மேற்பார்வையில் பலர் ஆராய்ச்சி செய்துவருகின்றனர். தெ.பொ.மீ. அவர்களிடம் ஆராய்ச்சி செய்து பட்டம் பெற்றவர்களும், அவர்களுடைய மாணவர்களும் மொழியியல், பிற துறை அறிவு, மேனாட்டார் தொடர்பு போன்றவைகளால் புதிய துறைகளில் ஆய்வை மேற்கொண்டு வருகின்றனர். மு.வ. அவர்களிடம் உருவான பேராசிரியர்களும் அவர்களுடைய மாணவர்களும் இலக்கிய ஆய்வில் முன்னணியில் நிற்கின்றனர். எம்.ஏ. பட்ட வகுப்பில் விருப்பப் பாடமாகவும் பின்னர் ஆராய்ச்சிக்குப் பொருளாகவும் நாட்டுப்புறவியல், தற்கால இலக்கியம் போன்றவற்றை முதலில் இவர்கள் பரிந்துரைத்தனர்.

10.7.2 டாக்டர் தெ.பொ. மீ., டாக்டர் மு.வ. ஆகிய இரு பேராசிரியர்களும் தனித்தனிச் சிறப்புடைய ஆராய்ச்சிப் போக்கை உருவாக்கினர் என்று கூறமுடியாது. ஆனால், இவர்கள் இருவரின் தூண்டுதலே இன்றைய வளர்ச்சி. இந்த நூற்றாண்டில் தமிழியல் ஆராய்ச்சிக்கு அடிகோலியவர்கள் இவ்விருவருமே ஆவர். தெ.பொ.மீயிடம் பயிற்சி பெற்றவர்களில்

Scanned by TapScanner

பலர் இலக்கிய, இலக்கண ஆராய்ச்சிகளிலிருந்து மொழியியல் ஆய்விற்குத் திரும்பினர். வெளிநாடுகள் பலவற்றிற்கும் சென்று பயிற்சி பெற்று வந்தனர். இதனால், தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் புதிய கண்கொண்டு காணவேண்டும்; புதிய நோக்கில் ஆராயவேண்டும் என்ற துடிப்புடன் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். தம் மேற்பார்வையில் ஆராய்கின்றவர்களையும் அந்த முறையில் செயற்படுத்தினர். தமிழ் இலக்கியம், இலக்கணம், மொழியியல், நாட்டுப்புறவியல், இதழியல், தமிழகக் கோயிற் கலை, நாடகவியல் என்ற பல்வேறு துறைகளில் தம் மாணவர்களை ஆராய்ச்சி செய்வதற்கு இவர்கள் தூண்டுகின்றனர். இத்தகைய போக்கில் இன்று முன்னணியில் நிற்பது மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆகும். **மதுரை ஆராய்ச்சிப் போக்கு** (Madurai School of Research) என்ற ஒரு போக்கை உருவாக்குவதற்குரிய அடித்தளம் இடப்பட்டுவிட்டது. இதைப் போன்றே கேரளப் பல்கலைக்கழகத்திலும் சூழ்நிலை உருவாகி வருகிறது. உண்மையில், தமிழகப் பல்கலைக்கழகங்களின் தமிழ்த்துறைகளுக்கு முன்னோடியாகத் தமிழ் ஆராய்ச்சியில் விளங்குவது கேரளப் பல்கலைக்கழகத் துறை ஆகும். இவ் வகையில் டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியன், டாக்டர் மா. இளைய பெருமாள் ஆகிய இருவரும் இம்முறையில் செயற்பட்டு வந்தனர்.

*10.8.1* மேலைநாட்டுப் புதிய முறையில் தமிழ்க்கல்விக்கு எம்.ஏ., பி.ஏ. (ஆனர்ஸ்) போன்ற பட்டப்படிப்பு வகுப்புக்களை உருவாக்கியது அண்ணாமலைப் பல்கலைக்கழகம். விபுலானந்த அடிகள், சோமசுந்தர பாரதியார், வேங்கடசாமி நாட்டார், ரா.பி. சேதுப்பிள்ளை, பண்டிதமணி அ. சிதம்பரநாதன் செட்டியார், பூவராகம் பிள்ளை, அருணாசலம் பிள்ளை, தெ.பொ.மீ., ஔவை துரைசாமிப்பிள்ளை, வ.சுப. மாணிக்கம் போன்றோர் பேராசிரியர்களாக இருந்து தமிழை ஆராய்ச்சிப்போக்கில் வளர்த்த இடம் இதுவே. இசைத் தமிழுக்கு இப்பல்கலைக்கழகம் ஆற்றிய பணி சிறப்பானது. இன்று மொழியியல் ஆய்வில் இப்பல்கலைக்கழகம் முனைந்து செயற்பட்டு வளர்ந்துவருகிறது.

*10.8.2* சென்னைப் பல்கலைக்கழகம் இலக்கிய, இலக்கண ஆய்வுகளுடன் அண்மைக்காலமாக மொழியியல் நாட்டுப் புறவியல், தமிழகக்கோயில்கள் போன்ற ஆராய்ச்சிகளில் ஈடுபடத் துணைநிற்கின்றது. சென்னையிலுள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சிப்பணி குறிப்பிடத்தக்கது.

Scanned by TapScanner

ஓரளவு வேகத்துடன் தமிழியல் ஆராய்ச்சியில் இந்நிறுவனம் முனைந்து செயற்பட்டுவருகிறது. தமிழகத்திற்கு வெளியே உள்ள பல்கலைக்கழகங்களில் கேரளப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பணி சிறப்பானது. பொதுநிலையில் இப்பல்கலைக்கழகங்கள் விதிகளைத் தளர்த்தி, கல்லூரி ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டே ஆராய்ச்சி செய்யும் வண்ணம் வழிவகுத்தது. இதனால், மிகுதியான ஆசிரியர்கள் கல்லூரிகளில் இருந்து தம் ஆசிரியப் பணியை ஆற்றிக்கொண்டு, பகுதிநேர ஆய்வை மேற்கொண்டனர். பல்கலைக்கழகங்களில் இருந்து மட்டுமே ஆராய்ச்சி நிகழ்த்திட வேண்டும் என்பதைத் தளர்த்தி முதுநிலைக் கல்லூரிகளுக்கும் பொதுவாக்கியது. இம்மாற்றத்தை முதன் முதலில் மதுரைப் பல்கலைக்கழகம்தான் செயற்படுத்தியது. டாக்டர் மு.வ. அவர்கள் துணைவேந்தராக இருந்தபோது செயற்படுத்தப்பட்ட இம்முறையைப் பின்னர் ஏனைய பல்கலைக்கழகங்களும் பின்பற்றின. பல்கலைக்கழக நிதியுதவிக் குழுவின் பரிந்துரையால் இன்று பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் எம்ஃபில் பட்ட ஆராய்ச்சி வகுப்பு நடைபெற்று வருகிறது. இதுவும் தமிழியல் ஆராய்ச்சியின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க ஒரு நிலையாகும். இவை தவிர, பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி இதழ்களை வெளியிட்டும், மாநாடு - கருத்தரங்குகள் நடத்தியும், ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டும் ஆராய்ச்சிப் பணி செய்துவருகின்றன.

*10.8.3* மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் தொடக்கத்தில் இருந்தே தமிழ்க்கல்வியை ஆராய்ச்சிப் போக்கில் இக்காலத் தேவைக்குத் தக்கவாறு மாற்றியமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுத் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிக்கும் படிப்பதற்கும் உரிய பொருளாக இக்கால இலக்கியத்தை அறிமுகம் செய்தது. படைப்பிலக்கிய எழுத்தாளர் களின் படைப்புக்களைக்கொண்டு நான்கு நாள், ஒருநாள் கருத்தரங்குகளை நடத்தியும், எம்.ஏ., எம்ஃபில், பிஎச். டி. ஆய்வுகளுக்குப் பொருளாக ஆக்கியும் மதுரை வழிகாட்டியது. தமிழ்த்துறையைத் தமிழியல்துறை என்று மாற்றித் தமிழுடன் பிற கலைகளையும் கற்க மதுரைப் பல்கலைக்கழகம் வாய்ப்பளித்தது. இதனால் தமிழில் முதுகலைப்பட்டம் பெறுவோர் தமிழ் இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றுடன் மொழியியல், நாடகவியல், இதழியல், நாட்டுப்புறவியல், ஒப்பிலக்கியம்

Scanned by TapScanner

போன்ற பல்வேறு துறைகளிலும் பயிற்சி பெற வாய்ப்பு ஏற்பட்டது. முத்தமிழ் இளங்கலை என்ற புதிய பாடத் திட்டத்தால் இயல், இசை, நாடகம் என்ற மூன்று தமிழையும் இணைத்துக் கற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. தமிழ் வளரும் மதுரை என்பதைச் செயற்படுத்தி வருகிறது. இப்பல்கலைக்கழகம், எம்ஃபில் பட்டப்படிப்பில் இந்திய மொழி மற்றொன்றையும் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. இதன் விளைவாக இந்திய மொழி இலக்கியங்களிடையே ஒப்பிலக்கிய ஆராய்ச்சி வளர்வதற்கும் வழி ஏற்பட்டுள்ளது.

10.9 பல்கலைக்கழகங்களின் உறுப்புகளாகத் தமிழ்க் கல்லூரிகள் தோன்றின. இவைகளும் தமிழ் ஆராய்ச்சிக்கு உதவுகின்றன. இவ்வகையில் மடங்களும் கல்லூரிகளை நிறுவி இப்பணியில் ஈடுபட்டன. மதுரைத் தமிழ்ச்சங்கம், கரந்தைத் தமிழ்க் கல்லூரி ஆகியவைகளின் பணி குறிப்பிடத்தக்கது. செந்தமிழ், தமிழ்ப்பொழில் போன்ற இவற்றின் இதழ்களும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆதரவில் வெளிவரும் செந்தமிழ்ச் செல்வி, நா. வானமாமலை நிறுவிய ஆராய்ச்சி, பொற்கோ நடத்தும் 'புலமை' போன்ற இதழ்களும் இவ்வாறு தமிழ் ஆராய்ச்சிக்கு உதவுகின்றன.

10.10 நிறுவன நிலையில் இல்லாமல் தனிப்பட்டவர்கள் உழைப்பு என்பது பெருமளவில் தமிழ் ஆராய்ச்சிக்கு உறுதுணையாக விளங்குகின்றது. இவ்வகையில் மு. அருணாசலம் அவர்களின் தமிழ்ப்பணி குறிப்பிடத்தக்கது. இவருடைய தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள் ஆராய்ச்சி நூல்களாக விளங்குகின்றன. இவர் பதிப்பித்துள்ள நூல்கள் பதிப்புக் கலை நுட்பமும் உண்மை விளக்கும் ஆய்வுப்போக்கும் உடையன. வைணவ நூல்கள், உரைகள் ஆகியவற்றை நல்லமுறையில் எளிய மக்களும் வாங்கும் வண்ணம் வெளியிடும் திருச்சி எஸ். கிருஷ்ண ஸ்வாமி ஐயங்காரின் பணியும் குறிப்பிடத்தக்கது. மயிலை சீனி வேங்கடசாமி, சோமலெ போன்றோர் தனிப்பட்ட நிலையில் நல்ல நூல்களின் வழி ஆராய்ச்சிக்கு உறுதுணையாக உதவினர்.

10.11 மேனாட்டுப் பல்கலைக்கழகங்கள் பல தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளன. தமிழ் ஆராய்ச்சி தற்போது நல்ல வளர்ச்சியை அடைந்து வருகின்றது. ஆராய்ச்சி வளர்வதால், ஆராய்ச்சி முறையியல் கல்வியும் வளர்ந்து வருகிறது. பிற

Scanned by TapScanner

துறைகளுடன் ஒருங்கிணைந்து வளர்ந்து நம் இலக்கிய, இலக்கணச் சிறப்புக்களை அனைவர்க்கும் வெளிப்படுத்துமாறு ஆராய்ச்சி இனி அமையவேண்டும். கோட்பாடுகளை உருவாக்குவதாக ஆராய்ச்சி அமைந்து தமிழின் சிறப்பை உலகிற்கு, இம்முயற்சிகள் வெளிப்படுத்தட்டும்.

## குறிப்புகள்

1. தொகை நூல்கள் (பக். 1-74), பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் (ப. 75-124), நிகண்டுகள் (ப. 155-224) பற்றிப் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை **இலக்கிய மணிமாலை** நூலில் கூறுகிறார்.
2. இக்கருத்து பற்றி, இந்நூலின் இரண்டாம் இயலில் (ப. 12-16) முன்பும் கூறப்பட்டுள்ளது.

Scanned by TapScanner

# துணைநூற்பட்டியல்

## தமிழ்


1. அகிலன், **கயல்விழி**, சென்னை, பாரி புத்தகப் பண்ணை (வி.உ.), 1972, மூன்றாம் பதிப்பு.

2. சுப்பிரமணியன், ச.வே. (ப.ஆ.), **ஆராய்ச்சி நெறிமுறைகள்**, சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1975. முதற்பதிப்பு.

3. தொல்காப்பியர், **தொல்காப்பியம் பொருளதிகாரம்**, இளம்பூரணர் உரையுடன், சென்னை, கழகம், 1962, மறுபதிப்பு.

4. தொல்காப்பியர், **தொல்காப்பியம் பொருளதிகாரம்**, மெய்ப்பாட்டியல், பேராசிரியர் உரை, சென்னை, கழகம், 1966

5. நக்கீரர் (உ.ஆ)., **களவியல் என்ற இறையனார் அகப்பொருள்**, சென்னை, கழகம், 1953, முதற்பதிப்பு.

6. பரிமேலழகர் (உ.ஆ), **திருக்குறள்**, புலியூர்கேசிகன்(ப.ஆ), சென்னை, பூம்புகார் பிரசுரம், 1976, முதற்பதிப்பு (கையடக்கப் பதிப்பு)

7. பெரிய கருப்பன், இராம. இலக்குமணன், எம்.எஸ். **ஆய்வியல் அறிமுகம்**, மதுரை மீனாட்சி புத்தக நிலையம், (வி.உ.), 1977, முதற்பதிப்பு.

8. முத்துச் சண்முகன், **தமிழ் இலக்கியக் கோட்பாடுகள்** மதுரை, முத்துப்பதிப்பகம், 1976, இரண்டாம் பதிப்பு.

9. முத்துச் சண்முகன், வேங்கடராமன், சு., **ஆய்வுக் கட்டுரை எழுதும் முறை**, மதுரை, சர்வோதய இலக்கியப் பண்ணை (வி.உ.), 1976, முதற்பதிப்பு.

10. வையாபுரிப்பிள்ளை, எஸ்., **இலக்கிய மணிமாலை**, சென்னை, தமிழ்ப்புத்தகாலயம், 1964, மூன்றாம் பதிப்பு.


Scanned by TapScanner

11. சாந்தா,அ., "மாணவர்களும் செய்தியிதழ்களும்" வையை மலர் நான்கு, முத்துச் சண்முகன், வேங்கடராமன். க. (ப.ஆ.), மதுரை,மதுரைப் பல்கலைக்கழகம், 1977, முதற்பதிப்பு.

12. வேங்கடராமன், சு., "வைணவம் வளர்க்கும் கலை (அரையர் சேவை ஓர் அறிமுகம்)", தினமலர் 17 - 10 - 1978.

**ஆங்கிலம்**

13. Annie Thomas, Dissertations on Tamilology Madras, International Institute of Tamil Studies, 1977, First Edition.

14. Bajpai, S.R. Methods of social Survey and Research, Kanpur, Kitab Ghar, 1974, sixth Edition.

15. Gopal M.H., An Introduction To research Procedure in Social Sciences, Bombay, Asia Publishing House, 1970, Second Edition.

16. Janathan Anderson, Berry Durston, H. Millicent Poole, Thesis And Assignment Writing, New Delhi, Wiley Eastern Private Limited, 1970, First Edition.

17. Sonachalam, K.S. Research Methodology of social Sciences, Koodal Publishers, 1978, First Edition.

18. Wilkinson, T.S. Bhandarkar, P.L. Methodology and Techniques of Social Research, Himalaya Publishing House, 1977, First Edition.

19. Young, Pauline V., Scientific Social Surveys And Research, New Delhi, Prentice - Hall of India Private Limited, 1973, Second Indian Reprint.

Scanned by TapScanner